கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(21.03.2021 - 21 பங்குனி 2021 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 11, கதிர் - 249, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 08 / NEWS / 2021

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05





## பாஸ்கு விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை



# முழுமையற்றிருப்பதால் எமக்கு அதில் திருப்தி இல்லை

**கொழும்பு மறைமாவட்டத்தின் ஆயர் இல்லத்தில் நடந்த விசேட ஊடக சந்திப்பில், அதி. மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்கள்.**

மேலும் கூறுகையில், பாஸ்கு தாக்குதலைப் பற்றிய விசாரணை அறிக்கையில் மேலும் அதிகமான விசாரணைகளை எதிர்பார்த்திருந்தோம். ஆயினும் எதிர்பார்ப்பு வீணாகியது.

“உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது கொல்லப்பட்ட எமது மக்களின் துண்டுத் துண்டாக சிதறிக் கிடந்த உடல்களை நான் நேரில் பார்த்திருந்தேன். அதனை அரசியல்வாதிகள் பார்த்தார்களா என்பது எனக்குத் தெரியாது?”

இத்தாக்குதலின் சூத்திரதாரி யார்? நிதியுதவி வழங்கியவர்கள் யார்? உள்ளூர், வெளியூர் சக்திகள் இருந்தனரா? போன்ற கேள்விகளுக்கான விடைகள் விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் இல்லை. பாஸ்கு தாக்குதலின்மூலம் எமது மக்கள் மானபங்கம் படுத்தப்பட்டனர். ஆன்மீக வழிபாட்டில் ஈடுபட்டதால் அவர்களின் உடல் சிதறடிக்கப்பட்டது. இந்நிகழ்வை நியாயப்படுத்தி இலாபடையவும், பயனடையவும் நாம் யாருக்கும் இடமளியோம்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கை

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அதிவிசேட கூட்டம் 2021ம் ஆண்டு பங்குனி மாதம் 9ம் திகதி நடைபெற்ற போது, 2019 சித்திரை 21ம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் தற்போதைய நிலவரம் பற்றி கவனமாக பரிசீலிக்கப்பட்டது. 2 வருடங்கள் கடந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கிடைக்கும் என்று ஆவலுடன் இருக்கிறார்கள். இலங்கை ஆயர் பேரவை பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் (PCOI) அறிக்கையை பரிசீலினை செய்துள்ளனர். அந்த அறிக்கையில் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ள உண்மைகளையும், ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நாம் வரவேற்கின்றோம். இந்த பரிந்துரைகளை உடனடியாக செயற்படுத்த, நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முழு முயற்சியுடன் ஈடுபடவும், குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற ரீதியில் குற்றவியல் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைப்பாட்டப்பட வேண்டும். சட்டமா அதிபருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டு முழுச் சுதந்திரத்துடன் அவர் செயற்படவும், குற்றவாளிகளாக கணிக்கப்பட்டுள்ளோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும் என்றும் நாம் வேண்டி நிற்கின்றோம்.

இந்த குண்டுத் தாக்குதலுக்கு நிதி மற்றும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவி செய்தவர்கள் இந்த மிலேச்சத்தனமான பயங்கரவாத தாக்குதலை நடத்த தூண்டுதல்களை மேற்கொண்டவர்கள், இந்த செயல் இடம்பெறுவதை தடுக்க தன்னிச்சையாக தமது கடமைகளை மேற்கொள்ள தவறிய அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடர சட்டச் செயற்பாடுகள் நீதித்துறையினால் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்து நிற்கின்றோம்.

மிகவும் உணர் திறன்மிக்க 22 ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைப்பதில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என அறிகிறோம். அவை அவருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமென தெரிவித்து நிற்கின்றோம்.

அத்தோடு உடனடி வினைத்திறனுடனான வெளிப்படையான செயல்முறை அடிப்படையில் நீதி நிலைநாட்டப்படும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம். எமது இலங்கைத் திருநாட்டின் அமைதி, சமாதானம், மக்களுடைய பாதுகாப்பு கருதி நீதி, நேர்மை, சமத்துவத்தின் பெயரில் இந்த முக்கிய விடயத்தில் பொறுப்புடையவர்கள் தமது கடமைகளை தாமதிக்காமல் செய்யவேண்டும். தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதியாக அமையும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்.

**மேதகு ஆயர் ஜே. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, ந.நா.ச, ஆண்டகை தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை பதுளை மறைமாவட்ட ஆயர்**

**மேதகு ஆயர் ஜே.டி. அந்தனி ஆண்டகை, பொதுச்செயலாளர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை, கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்**

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# கறுப்பு ஞாயிறு அமைதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அனுஷ்கரிக்கப்பட்டது

### கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம்



கறுப்பு ஞாயிறு அன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் காலை 7.30 மணி தமிழ் திருப்பலியானது துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் தமிழ் குருக்களும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். 2019ம் ஆண்டு தாக்குதல் நடந்த நேரமான 8.45 மணிக்கு ஆலய மணி ஒலிக்கப்பட்டது. திருப்பலியின் பின்பு ஆலய முன்றலில் அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டபோது;...

15

### கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம்



நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் துணை ஆயர் மேதகு ஜே.டீ அன்தனி ஆண்டகை கறுப்பு ஞாயிறு தின மறையுரையின்போது; பாஸ்கு குண்டு தாக்குதலின் விளைவை அனுபவிக்கும் மக்களுக்காக தொடங்கியிருக்கும் இந்த போராட்டம் மத, இன, அரசியல் கட்சி போன்ற போராட்டமல்ல, இது நீதிக்கும் அநீதிக்கும் இடையில் நடக்கும் போராட்டமாகும் என்றார்.

# 74வது சிறுவர் தினம்



தேவத்தை இலங்கை இராக்கினி பெசிலிக்காவில் இம்மாதம் 6ம் திகதி 74வது வருடாந்த சிறுவர் தினம் நடைபெற்ற திருப்பலியின் மறையுரையின்போது, அதி. மேதகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை; எமது பிள்ளைகள் சிறுவயது முதல் திருச்சபையின் மறையுடன் ஒன்றித்து வளர்க்கப்பட வேண்டும். பிள்ளைகளே, உங்களது வாழ்வை அர்த்தமுள்ளதாக, ஆழமாக வாழ்வதற்கு, முதலாவது இறைவனுடனும் இரண்டாவது அயலவர்களுடனும்,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# தலவில தபக்கால திருவிழா



சிலாப மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு. வெலன் மெண்டிஸ் ஆண்டகை, தலவிலை தேசியபுனித அன்னம்மாள் திருத்தலத்தில் தபசுகால மூன்றாவது வார திருவிழா மறையுரையின்போது, 2019 பாஸ்கு தாக்குதலில் உயிர்பலியான அப்பாவி மக்கள், வாழ்நாள் முழுவதும் அங்கவீனமான மக்களின் கண்ணீருக்காகவும், தேசிய பாதுகாப்பை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# வாழ்த்துகின்றோம்.



இலங்கை பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனராக இரண்டாம் தடவையும் நியமனம் பெற்ற எம் அருட்தந்தை பெசில் ரொஹான் அடிகளாருக்கு எமது வாழ்த்துக்கள்

குருணாகல் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயர் அதி.வண.ரேமன்ட் பீரிஸ் ஆண்டகையின் கரங்களினால் இறைவன் முன்னிலையில் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டு நற்செய்திக்கு குரல் கொடுக்க 1997ம் ஆண்டு ஆவணி 2ம் திகதி அருட்தந்தை...

15

**கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். (தி.பா 51)**

## கொரோனாவின் கொடூரம்



இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு உயர் மறைமாவட்டம் அன்றைய பேராயர் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகை பொறுப்பாயிருந்த காலம். (1971 - 1972 களில் சேகுரா J.V.P அணியின் புரட்சியினரால் திகிலடைந்திருந்தது இலங்கைத் தீவு. 1975ம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையில் தூய ஆவியானவரின் பெருங்காற்று வீசி, திகிலடைந்திருந்த இலங்கை தேசத்தில் ஒளியேற்றியதைப் போன்று திருமுழுக்கும், உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனங்கள் புதுப்பிக்கப்பட்டு மறுமலர்ச்சியை ஊட்டும் ஒரு செயற்பாடு தொடங்கப்பெற்றது. இந்த புத்தெழுச்சியின் கருவியாக கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் அருட்பணி ஒஸ்கார் அபயரத்ன அடிகளார் இறைவனால் இயக்கப்பட்டார். இம்மறுமலர்ச்சி 8 உரைகளால் ஆரம்பிக்கப்பட்டு இறுதி இரண்டு நாட்கள் வழிப்பாட்டுடன் மக்களை புதுவாழ்வு (புபுதுவ) எனும் திருச்சபைக்குள் உள்வாங்கினர். இவ்வழிப்பாட்டின் மூலம் மக்களின் ஆன்மீக அனுபவம் மீள்லெழுச்சிப் பெற்றதால் இலங்கை முழுவதும் அதிகமான மக்கள் மத்தியில் இது காட்டுத் தீயாகப் பரவி பலர் இயேசுவை ஆண்டவராக ஏற்று தமது வாழ்வில் இறைவனுக்கு முதலிடத்தைக் கொடுத்து வாழ்ந்து வந்தனர். சிங்கள மொழி, ஆங்கில மொழியில் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் தமிழ் மொழியில் இல்லாததால் எங்கள் ஒரு சிலரின் விலாசங்களை எடுத்து, சந்தித்து ஒன்று கூட ஒரு நாளை நியமித்தனர். திரு. டிவோட்டா, நான் (சுபந்திசகோ. மேரி மார்த்தா), திரு. அருளானந்தம் ஆகியோருடன் முதல் சந்திப்பு நடைப்பெற்றது. அன்று அருட்பணி ஒஸ்கார் அடிகளார் தமிழ் மொழியிலும் புதுவாழ்வு அர்ப்பண வழிப்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தனது ஆதங்கத்தை தெரிவித்தார்கள். இதன் விளைவாக 1976ம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தின் அருட்பணி. ஜெயசீலன் அடிகளாரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்தில் குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் என பலருக்கு புதுவாழ்வுக்கு உள்வாங்குவதற்கான 8 உரைகள் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கி இறுதி அர்ப்பண வழிப்பாடும் நடத்தப்பட்டது. ஒவ்வொருவரின் திறமைக்கேற்ப பாடல் குழு, இசைக்குழு, உரைகொடுப்பாளர் குழு என பயிற்றுவிக்கப்பட்டனர்.

பின்பு யாழ்ப்பாண குழுக்களின் உதவியுடன் கொழும்பில் 1976ம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழில் புதுவாழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

அருட்பணி கிறிஸ்டியன் வாஸ் அடிகளார் அருட்பணி. (இரும்பு) பொன்னையா, அருட்பணி ஆர். ஜோசப் (பின்னர் மன்னார் ஆயர்) கொழும்பில் உள்ள தமிழ் பகுதிக்கு வந்து பாடல் குழுவிற்கு உதவியதுடன், ஆரம்ப உரைகளுடன் அர்ப்பண வழிப்பாடுகளையும் வழங்கினார்கள். யாழிலும் கொழும்பிலும் தமிழ் புதுவாழ்வு உருப்பெற்று செழித்தோங்கியது. உரைகொடுப்பதை அருட்பணியாளர்களுடன் மட்டுப்படுத்தப்படாமல் பொதுநிலையினரையும் பயிற்றுவித்தனர். இவ் அர்ப்பண வழிபாடுகள் 1976-1977ம் ஆண்டுகளில் கண்டி, மன்னார் மறைமாவட்டங்களிலும் பரவியது. வருடத்திற்கு ஒருமுறை பெந்தகோஸ்தே நாளுக்கு முதல் நாள் சனிக்கிழமை இலங்கை முழுவதிலுமுள்ள 8 உரைகளைப் பெற்று அர்ப்பண வழிப்பாடுகளின் மூலம் உள்வாங்கப்பட்ட அனைவருக்கும் திருவிழிப்பு நடந்தது. தமிழ் பகுதிக்கு திரு. டிவோட்டா பொறுப்பேற்றார். அவருக்கு துணையாக பிரான்சிஸ்கன் அருட்சகோ. பிடேலியாவும் நானும், கர்வாலியோ, ரஞ்சித் போன்ற பொதுநிலையினரும் இன்னும் சிலரும் இருந்தனர். இந்த திருவிழிப்பு தனிச் சிங்களத்தில் நடந்ததால் தமிழ் மொழிபெயர்ப்பும் வேண்டும் என கேட்டுக்கொண்டதால் இது இறுதியில் பிரிவினையில் போய் முடிந்தது. கொழும்பு வாழ் தமிழ் மக்கள் திரு. டிவோட்டாவுடன் கூடி தமிழ் செபக்கூட்டங்களை நடத்தினர். இப்பிரச்சினையைத் தீர்க்க அப்போதைய ஆயர் நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகை எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது. அதனால் ஆயர் திரு. டிவோட்டாவுக்கு தமிழ் மொழியில் தொடர்ந்து செய்ய ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆனால் மூன்று நிபந்தனைகளை விதித்தார்கள். 1. வேற்று சபைகளுக்கு செல்ல கூடாது, 2. பங்குக் குருவின் கீழ் பங்கு மண்டபத்தில் நடத்தல் வேண்டும், 3. கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகள் மாத்திரமே வழங்கப்பட வேண்டும் என்பனவாகும். அதனால் திரு. டிவோட்டா தலைமையில் 'கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம்' (Cathalic Charismatic Renewal..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## புதிய திருத்தலத்தின் திருச்சிலுவையை சுமந்து செல்ல அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.





இரத்தினபுரி மறைமாவட்டத்திலே மலையக பங்காகிய தொலல்... பங்கு இருவேறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஹப்புறுகல பங்கிற்குச் சொந்தமான மில்லவிட்டிய தோட்ட புனித செபஸ்தியார் ஆலய இறைமக்கள் தமக்கென்று புதிய பதிநான்கு ஸ்தலங்களையும் கொண்ட சிலுவைப்பாதை தியான திருத்தலம் ஒன்றை கடந்த பங்குனி 4ஆம் திகதியன்று இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. கிளிட்டஸ் பெரேரா OSB. ஆண்டகையின் திருக்கரங்களால் ஆசீர்வதித்து திருச்சிலுவை பாதை தியானம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வை பங்கு அருட்பணி. சம்பத் பிரசாத் விஜேரட்ண அடிகளார் தமது சிரமேற் கொண்டு இறைமக்களுடன் இணைந்து மிக அக்கறையுடன் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். பத்துக்கும் மேற்பட்ட அருட்பணியாளர்களும், வெளிப்பங்குளிலிருந்தும் ஏராளமான கிறிஸ்து இயேசுவின் அன்பு இறைமக்களும் கலந்து கொண்டனர்.

அரியதோர் சந்தர்ப்பம்!... இயற்கை அழகு நிறைந்த இரத்தின கற்கள் விளையும் ரத்தினபுரிக்கு வந்து மலையக மண்ணிலே - மில்லவிட்டிய தோட்ட மலையுச்சியிலே அமைந்துள்ள திருத்தலத்தை தரிசித்து ஆன்மீக ஆற்றலைப் பெற்றுக்கொள்ள பங்குத்தந்தை அன்புடன் அழைக்கின்றார்.

**தொடர்புகொள்ளவும்**

**070-2788943, 077-8473546.**

**படம் : R. குயின்டா, மில்லவிட்டிய.**

**தகவல் : மேரி இருதயநாதன், பேராலயம், இரத்தினபுரி.**


**புனித வாரம் – வாசக பணியாளர்களுக்கு**

முன்னுரை, வாசகங்கள், நம்பிக்கையாளர் மன்றாட்டு

**புனித வாரம் – அருட்பணியாளர்களுக்கு**

ஐந்து தினத்துக்குறிப்பு, மறை உரை குறிப்புக்கள், வழிபாட்டுக் குறிப்புக்கள், வழிபாட்டு ஆயத்தங்கள், சகல நற்செய்திகள், பொது மன்றாட்டுக்கள், திருமுழுக்கு வழிபாடு

**குருத்தோலை ஞாயிறும், பெரிய வெள்ளி புத்தகம்,**

மூன்று புத்தகங்களின் விலை ரூபா 650/-

கிடைக்குமிடம் : கொழும்பு 13, சுகுமார் கத்தோலிக்க புத்தகசாலை, தேசிய வழிபாட்டு திணைக்களம், பல்கம் பிளேஸ், வழிபாடு காரியாலயம், ஆயர் இல்லம்.

**தகவல் : அருட்பணி. இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம்.**


## திருஅவையின் தலைமைப் பணியில் 8 ஆண்டுகள்



பங்குனி 13, சனிக்கிழமையன்று, தனது பாப்பிறை தலைமைப் பணியில் எட்டு ஆண்டுகளை நிறைவுசெய்யும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த ஆண்டுகளில் கத்தோலிக்கர், திருஅவையை மாறுபட்ட கோணத்தில் பார்ப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று, இந்திய தலத்திருஅவை பணியாளர் ஒருவர் கூறியுள்ளார்.

மும்பையில், ஊடகத்துறையில் ஆலோசகராகப் பணியாற்றும், இயேசு சபை அருள்பணி Myron Pereira அவர்கள், "ஒரு தொலைதூர நாட்டிலிருந்து வந்துள்ள ஒரு மனிதரிடமிருந்து, அடுத்து வரப்போவது என்ன?" என்ற தலைப்பில், யூக்கா செய்தியிடம் தன் எண்ணங்களைப் பதிவுசெய்துள்ளார்.

2013ம் ஆண்டு பங்குனி 13ம் திகதி, அர்ஜென்டீனா நாட்டிலிருந்து, திருஅவையின் தலைமைப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, உலகம் முழுவதும் வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தவேளையில், அவர் தன்னோடு நற்செய்தியின் மகிழ்வைக் கொண்டுவந்தார் என்று, அருள்பணி Myron Pereira அவர்கள் கூறினார்.

### எட்டு ஆண்டுகளின் சாதனை

கடந்த எட்டு ஆண்டுகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சாதித்திருப்பது என்ன என்று கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையில், அவர், நாம் திருஅவையை நோக்கும் முறையை முழுவதுமாக மாற்றியுள்ளார் என்றும், அவரது முதல் நற்செய்தியின் வார்த்தைகள், கோட்பாடுகள் பற்றியோ, சட்டங்கள் பற்றியோ அல்ல, மாறாக, அவை கடவுளின் பரிவன்பு, மற்றும், இரக்கம் பற்றியதாக இருந்தன என்றும், அருள்பணி Pereira அவர்கள் கூறியுள்ளார்.

நம் பதிலுரையும், நம் அனைத்து சகோதரர், மற்றும், சகோதரிகளுக்கு, குறிப்பாக, ஏழைகள், சமுதாயத்தின் விளிம்புநிலையில் வாழ்வோர், புலம்பெயர்ந்தோர், வீடற்றோர், மற்றும், நோயாளிகளுக்கு, பரிவன்பைக் காட்டுவதாக அமையவேண்டும் என்றும், இப்பண்பை, திருத்தந்தை, பொதுப்படையாகவும், தவறாமலும் செயல்படுத்தி வருகிறார் என்றும், அருள்பணி Pereira அவர்கள் கூறியுள்ளார்.

நம் கிறிஸ்தவ நம்பிக்கையை எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதைவிட, எவ்வாறு அதை வாழ்கிறோம் என்பதில், திருத்தந்தை மிகுந்த ஆர்வமாக இருக்கிறார் என்றும், இந்த விடயத்தில், திருஅவையில் திறந்தமனதுடன் கலந்துரையாடல், மற்றும், விவாதங்கள் நடைபெறவும் ஊக்கப்படுத்தி வருகிறார் என்றும், அருள்பணி Pereira அவர்கள் கூறியுள்ளார்.

அருள்பணித்துவ கலாச்சாரத்தில் மாற்றத்தைக் கொணர முயற்சி, புதிய விழுமியங்களோடு புதிய உலகை அமைக்க முயற்சி, நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பராமரிக்க நடவடிக்கை, கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல், மற்றும், மனிதகுல உடன்பிறந்தநிலையை ஊக்குவிக்க நடவடிக்கை, இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த முயற்சி உட்பட பல்வேறு துறைகளில் திருத்தந்தை ஈடுபட்டு...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
21 பங்குனி, 2021 ஞாயிற்றுக்கிழமை.

## “கிறிஸ்துவுக்குள் எமது வாழ்வு வலுப்பெறும்போது அது அருளடையாளமாக மாறும்.”

மீட்பு மறை உண்மையில் மிகவும் முக்கியமானதுதான் துன்பங்களும் உயிர்ப்பும். நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தாம் படவிருந்த துன்பங்களைப் பற்றி மூன்றுமுறை முன்னறிவித்ததை நற்செய்தி நூல்களில் காண்கின்றோம். அம்மூன்று முறையும் தாம் துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவதாக முன்னறிவித்தார். ஆக துன்பம் இன்றி உயிர்ப்புமில்லை. பெரிய வெள்ளி இன்றி உயிர்ப்பு ஞாயிறும் இல்லை. பெரிய வெள்ளி என்றவுடன் எமக்கு ஞாபகம் வருவதுதான் பரிசுத்தவாரம். தவக்காலத்தில் வாழும் நாம் இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டோம். கிறிஸ்து தனது வாழ்க்கையில் பலதரப்பட்ட பயணங்களை மேற்கொண்டிருந்தார். கிறிஸ்து இம்மண்ணில் மனிதனாக அவதரிக்க விண்ணிலிருந்து மண்ணை நோக்கிப் பயணித்தார். சிறுகுழந்தையாக இருந்தபோது ஏரோதுவிற்கு பயந்து பெற்றோருடன் எகிப்து நோக்கிப் பயணித்தார். பணிவாழ்விற்கு தன்னை தயார்ப்படுத்த பாலைவனத்தை நோக்கிப் பயணித்தார். இவ்வுலகில் இறையன்பை நிலைநாட்டிய இறையரசைப் பரப்பிடப் மக்களை நோக்கிப் பயணித்தார். இறுதியாக தாம் இவ்வுலகில் மனிதனாகப் பிறந்ததன் பொருளை உலகிற்கு எடுத்துக் காட்டிட எருசலேம் நோக்கிப் பயணித்தார். இதுதான் எமக்கு மீட்பளிக்கும் பயணமாக அமைந்தது. இயேசுவின் அத்தனைப் பயணங்களும் ஒவ்வொரு வரலாறாகும்.

பயணம் செய்யும் திருச்சபையில் வாழும் நாம் எம்மால் கூறமுடியுமா “நான் எருசலேமுக்குப் போகவேண்டும்” “கொல்கொத்தா போகவேண்டும்” என. ஆம் எமது அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் துன்பங்களையும் சந்திக்கும் துயரங்களையும் பொறுமையாக ஏற்றுக்கொள்ளும்போது நாம் எருசலேம் நோக்கியும் கொல்கொத்தா நோக்கியும் பயணம் செய்துகொண்டிருக்கிறோம். பெரியோர்களின் அறிவுரைகள் ஆன்மீக வழிகாட்டிகளின் நல்லுரைகள் எமக்கு அவ்வப்போது கசப்பாகத்தான் தெரியும். அந்த கசப்புணர்வை நாம் ஏற்று வாழும்போதுதான் நாம் எருசலேமை நோக்கியும் கொல்கொத்தா நோக்கியும் பயணிக்க முடியும். எமது உறவினர்களாலும் சமூகத்தினர்களாலும் ஏற்படும் தொல்லைகளையும் சிரமங்களையும் தாங்கிடும்போது நாம் எருசலேம் நோக்கியும் கொல்கொத்தா நோக்கியும் பயணம் செய்கிறோம். எமது உற்ற நண்பர்கள் எம்மை கைவிடும்போதும் புறக்கணிக்கும்போதும் உதறிதள்ளிடும்போது பொறுமை காப்போம். அப்போது நாம் வெற்றியுடன் எருசலேம் நோக்கியும் கொல்கொத்தா நோக்கியும் பயணம் செய்கிறோம். நாம் இவ்வுலகில் பிறந்ததற்கான பொருளை அடைந்திட எமக்குத் தரப்படும் சந்தர்ப்பங்கள்தான் இவை அனைத்தும்.

“கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காகத் துன்பங்களையும் ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள” (பிலி.1:29). கிறிஸ்துவிடம் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் வளர்ச்சி பூரணமடைவது கிறிஸ்துவிற்காக நாம் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்போதுதான். அதே சமயத்தில் நம்பிக்கை வளர வளரத்தான் துன்பங்களும் பெருகிக் கொண்டேபோகும். ஆனால் நாம் அனைத்து துன்பங்களையும் எமக்கோர் அருளடையாளமாக காணப் பழகவேண்டும். மனிதமட்டத்தில் இவ்வாறு காண்பதென்பது முடியாத காரியம் ஆனாலும் முயற்சிக்க வேண்டும். எமக்கு யாரெல்லாம் துன்பம் வருவிக்கின்றார்களோ கவலையை தருகின்றார்களோ வேதனையை அதிகரிக்கின்றார்களோ அவர்கள் தான் எமக்கு அருளடையாளமாக திகழ்பவர்கள். காரணம் இயேசுவிற்காக நாம் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்போது கிறிஸ்துவோடு மேலும் மேலும் உறவை வளர்க்கின்றோம். கிறிஸ்துவுக்குள் எமது வாழ்வு வலுப்பெறும்போது அது அருளடையாளமாக மாறும். தொடங்கவிருக்கும் பரிசுத்த வாரத்தை நல்லதொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி கிறிஸ்துவுக்குள் சங்கமித்து பரிசுத்தமாக வாழ்ந்து நாம் பிறந்த வாழ்க்கைக்கு பொருள் கொடுப்போம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

ஓசான்னா

# குருத்து ஞாயிறு

பங்குனி 28



இயேசு ஏன் சோதனைக்கு ஆளானார்? என்ற கேள்வியோடு தவக்காலத்தைத் தொடங்கினோம்.

இயேசு ஏன் துன்பத்துக்கு ஆளானார்? என்ற கேள்வியோடு தவக்காலத்தை நிறைவு செய்கின்றோம்.

குருத்து ஞாயிறு அன்று தென்னை மரத்தின் இளம் தளிர்களைக் கொய்து கரங்களில் ஏந்தி ஆலயம் நோக்கிப் பவனியாகச் செல்கின்றோம். குருத்து ஞாயிறு நிகழ்வு மக்களின் நிலையற்ற தன்மையின் தெளிவான வெளிப்பாடு. ஒரு நாள் “ஓசானா” பாடி வாழ்த்தும் மக்கள் கூட்டம். மறுநாள் “ஒழிக” என்று கூச்சலிட்டது.

திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு எருசலேம் நோக்கி இயேசு தன் வெற்றிப்பவனியைத் தொடங்கினார். கழுதை மீது அமைதியின் அரசராக சென்று சிலுவையின் சாவை ஏற்க, முன்னோக்கிச் செல்கின்றார். சிலுவைச் சாவு என்பது கடவுளின் நித்திய திட்டம் என்பதை நெஞ்சுறுதியுடன் ஏற்றுக்கொள்கின்றார். அதனால்தான் இயேசு சிலுவைப்பாடுகளை, கல்வாரி மரணத்தை...

- மனமுவந்து ஏற்றார் : இறைவாக்கினர் எசாயாவின் துன்புறும் ஊழியனாக இறைவாக்கு அவரில் நிறைவேறியது.
- நெஞ்சுறுதியுடன் ஏற்றார். இலக்கு தெரிந்திருந்த காரணத்தால் இறைவனின் திருவுளம் அவரில் நிறைவுபெற்றது.

**“ஆயிரக்கணக்கான வருடங்களாய் – எம்**
**ஆண்டவரே உம்மை எதிர்பார்த்தோம்.**
**இஸ்ரயேல் மக்களை ஆளவாரும் – எம்**
**இயேசுவே தேவனே எழுந்தருளும்”**

இது ஒரு பழந்தமிழ் பாடல். இது ஓசான்னா, தாவீதின் புதல்வா ஓசான்னா இந்த ஓசான்னாவின் பின்னணி என்ன?

அன்று யூதர்களுக்குக் கூடாரத் திருவிழா. வீதியெல்லாம் விழாக்கோலம். விண்ணைப் பிளந்தன வெற்றி முழக்கங்கள். அந்த வெற்றி முழக்கச் சுலோகம் என்ன? “ஆண்டவரே மீட்டருளும், ஆண்டவரே வெற்றித் தாரும்...” (தி. பா 118:25) “ஆண்டவரே மீட்டருளும்” என்பதற்கு எபிரேயச் சொல் “ஓசான்னா”

போருக்குப் புறப்படும்போது “ஓசான்னா” அபயக் குரலாக எழும்பும், வெற்றி பெற்று திரும்பும் போது “ஓசான்னா” வெற்றி முழக்கமாக அதிரும். ஆக ஓசான்னா என்பது ஒரு செபம். ஓர் அபயக்குரல், ஒரு வெற்றியின் வீர முழக்கம், மகிழ்ச்சியின் ஆர்ப்பரிப்பு, புகழ்ச்சியின் கூக்குரல்.

அந்நியர் ஆட்சியில் அடிமைகளாக அல்லலுக்கும் அவலத்துக்கும் ஆளாகிய சூழலில் இறைவன் தலையிட்டு தங்களை காப்பாற்றுவார் என்பது இஸ்ராயேலரின் நம்பிக்கை அனுபவம், எகிப்தில் மோசே வழியாக விடுதலை கண்ட பாலஸ்தீன பாமரர்கள் இயேசுவின் உருவில் புதிய மோசேயைக் கண்டார்கள். இயேசுவின் பணிவாழ்வுக் காலமாகிய மூன்று ஆண்டுகளும், அந்த எளிய மக்களின் உள்ளத்தின் ஆழத்தில் படிந்திருந்த “அரசியல் மெசியா” என்ற எதிர்பார்ப்பு, திடீரென உணர்ச்சிப் பிழம்பாகக் கொந்தளித்ததன் விளைவுதான் குருத்தோலைப் பவனி.

இஸ்ராயேல் மக்கள் இயேசுவை ஆன்மீக மீட்பராக அல்ல, அரசியல் மீட்பராக, பலியாகும் தியாகச் செம்மலாக அல்ல, பவனி வரும் மகிமையின் மன்னராக, அரச மரியாதையைச் செலுத்தினர். “தாவீதின் மகனுக்கு ஓசான்னா”, யூதர்களின் அரசே வாழி” என்று முழங்கினர். ஆனால்..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்



# சிலுவை கற்றுத் தரும் பாடம் அன்பு!

நம்மைச் சுற்றி ஒவ்வொரு கொலை, கொள்ளை, அடக்கு முறைகள், போராட்டம் என்பன அரங்கேறிய வண்ணமே இருக்கின்றன. நம் கண்கள் முன்னே நடந்தாலும் கண்டு கொள்ளாமல் நமது வாழ்க்கைப் பயணங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம். பட்டப்பகலில் அனைவர் முன்னும் சிறு குற்றத்திற்காக கொடூரமான முறையில் பலர் தாக்கப்படுகின்றனர். தட்டிக்கேட்க யாரும் முன் வருவதில்லை. நம் வாழ்க்கை பற்றிய பயம் நம்மேல் மட்டும் நாம் கொள்ளும் அக்கறை, நாம் நம்மைச் சுற்றி வரைந்துள்ள வட்டங்கள் ஆகியன நம்மை முடக்கி விடுகின்றன. ஒவ்வொரு நாடும் தங்களது வாழ்வுரிமைகளைக் காக்க மக்கள் பல்வேறுபட்ட போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். நமக்கு அவை வெறும் செய்திகள் மட்டுமே. அன்பிற்காக ஏங்கும் மனித சமூகம் அதனை தேவையான அளவு பெறமுடியாத போது வன்முறைகளும் கலவரங்களும், கொலைகளும், கொள்ளைகளும் இடம்பெறுகின்றன. இந்த அன்பின் பாதையைப் பற்றியே இயேசு காட்ட வந்தார். ஆனால் அந்த அன்பின் பாதையே சிலுவையாக மாறியது. சிலுவையிலே தொங்கியபோது எவ்வளவு உங்களை அன்பு செய்கிறேன் என கைகளை விரிந்து அடங்க முடியாத அளவு நான் உங்களை அன்பு செய்கின்றேன் என்று எமக்காக தன் உயிரைக் கொடுத்தார் நம் இயேசு.

மனித வரலாற்றில் மிகவும் வருந்தத்தக்க நிகழ்வுகளில் என்று இயேசுவின் மரணம், ஆனால் புதிதாக இம்மரணமே கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமானது. இதுவே கிறிஸ்துவின் அதி உன்னத அடையாளமாக உள்ளது. திருச்சபையின் வழிபாட்டு மரபில் சிலுவை ஒரு சிறப்பு இடம் பெறுகின்றது. நாம் எந்தவொரு தேவாலயத்திற்குள் நுழைந்தாலும் எமது கவனத்தை ஈர்க்கும் முதல் அடையாளம் சிலுவை. நம் ஆண்டவர் இயேசு இரு கரங்களையும் விரிந்தவராய் எம்மை வரவேற்று தமது அன்பின் ஆழத்தை எமக்கு எடுத்தியம்புகின்றார். இயேசுவின் அன்பு உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. சிலுவை மரத்திலே எமக்காக எம்முடைய பாவங்களுக்காக தன்னுயிரை கொடுத்து எம்மை தமது இரத்தத்தை சிந்தி மீட்டார்.

என்னைப் பின்பற்ற விரும்புகின்றவன் தன் நாளாந்த சிலுவையைச் சுமந்துகொண்டு என் பின்னே வரட்டும். புனி.மத்.16:24) இது ஒரு சாதாரண அழைப்பு அல்ல கிறிஸ்தவர்களுக்கு இது சவாலாக அமைகின்றது. துன்பங்கள் இல்லாத மனித வாழ்வு இல்லை. ஆனால் அத்துன்பங்களை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றோம். துன்பங்கள் எம் வழியில் வரும்போது சிலுவையை நாம் உற்று நோக்கும்போது இயேசு எமக்கு ஆன்மீக வலிமையையும் வல்லமையையும் தருவார். இயேசுவின் திருச்சிலுவை மரணமானது இறைவனின் தியாகத்தை அன்பை எமக்கு வெளிப்படுத்துகின்றது. சிலுவை என்பது கிறிஸ்துவின் பாவத்தின் மீதான போரின் காட்சியை எமக்கு நினைவு படுத்துகின்றது. இயேசுவின் மரணம் இறைவன் விருப்பத்தாலும் கட்டளையாலும் நிகழ்ந்த தொன்றாகும். மனுக்குலத்தை பாவச் சேற்றிலிருந்து மீட்டெடுக்க இறை மனிதனே தேவை என்பதால் தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். இதனால் இறைவன் அன்பு நிறைந்தவர் இரக்கம் உடையவர் என்பதைக் காட்டுகின்றது. மீட்பு நிகழ்வின் உச்சக்கட்டமாக ஏற்பட்ட மரணத்தை தாமே முன்வந்து தழுவிய வீரனாக இயே சுவை நாம் காண்கின் றோம். மனித காரணங்கள் சூழ்நிலைகள் இவற்றிற்'கு முக்கிய மல்ல. இறைவனின் திட்டத்தை நிறை வேற்றும் வெறும் கருவிகளாகவே அன்றைய மனித சமூகம் காணப்பட்டது. இது ஒரு ஆன்மீக நிகழ்வாகவே வழிபாட்டு கொண்டாட்டமாகவே நடைபெறுகின்றது. மனித வரலாற்று காரணங்களுக்கே இங்கே இடமில்லை. அனைத்தும் இறைவனின்



கரத்தினாலேயே வழிநடத்தப்படுகின்றது.

இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம் மனித குலத்தின் இடறல் நீக்கப்பட்டு கொடுமைகள் நீக்கப்பட்டு சமூ கப் புரட்சிகள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. இயேசுவின் மரணம் மனித வரலாற்றில் சுதந்திரமான விசுவாசக் காற்றை சுவாசிக்க வழிகாட்டியது. இயேசு தம்மை எதிர்நோக்கி வந்த மரணம் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்தார். தன் மரணம் மற்றவர்களால் தன்மேல் சுமத்தப்படும் என்பதை அறிந்திருந்தும் இயேசு தனது இலட்சியப் பயணத்தில் வந்து சவால்களை நேரடியாகவே சந்தித்தார். அன்றைய சமுதாயத்தில் காணப்பட்ட அநீதிகளை சுட்டிக்காட்டாமல் இருக்கவில்லை. தனது தந்தையின் திருவுளப்படி இறையரசை இவ்வுலகில் நிலைநாட்ட ஈற்றில் தனது உயிரையும் கொடுக்க இயேசு தயங்கவில்லை. தனது இலக்கியப் பயணத்தைக் கைவிடவில்லை. இவ்விலட்சியத்தில் இறைவனின் திருவுளம் நிறைவேறியது. தனது மக்கள் மீட்படைய வேண்டும் நிலைவாழ்வை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு இயேசு தன்னையே இவ்வுலகிற்கு கையளித்து தந்தையின் இணையற்ற அன்பை எமக்கு வெளிப்படுத்தினார்.

இயேசுவின் மரணம் அவரது இறுதியும் முழுமையுமான விசுவாச நிகழ்வு. தந்தைக்கு செய்த முழுமையாகன அர்ப்பணம். இருள், தோல்வி, அவ நம்பிக்கை என்பவற்றிற்கு முகம்கொடுக்க வேண்டி இருந்த போதிலும் புனி.மாற்கு 15:34 அவர் விசுவாசத்தை இறுதி நிலைப்பாட்டை அடைந்து தந்தையின் கரத்தில் தன்னை ஒப்படைத்தார். புனி. லூக் 22:46

சிலுவை தீமையின் பொறுமையான அடையாளம். மனித சொரூபத்தின் துக்கமான வெளிப்பாடு. மனித துன்பத்தின் ஏழை எளியோரின் துன்பங்களை தெளிவாக்குகின்றது. அநீதி, ஒடுக்கு முறைகளுக்கு இலக்கானவர்களை நீதியின் பாதையில் இட்டுச் செல்கின்றது. இது அன்பின் உன்னதமான அடையாளம். மனி தருக்கு இயேசு காட்டிய தியாகம் நிறை அன்பின் கண்கூடான உருவகமாகும். எமது வாழ்வில் நம் இலட்சியத்தை நிறைவேற்று வதற்காக அழைக்கப்பட்ட நாம் நம்மையே உயர்த்தக் கூடிய மனிதத் தன்மையின் உச்ச நிலையே சிலுவையாகும்.

சிலுவை என்பது இயேசு தன் வாழ்வாலும் பணியாலும் தெளிவாக்க விரும்பும் தந்தையின் அன்பின் அடையாளமாகும். இறைவன் ஏழைகள் வாழ்வில் ஈடுபட்டு துன்புற்று தம்மை கையளித்தார் என்பதை சிலுவை வெளிப்படுத்துகின்றது.

எனவே அன்பின் அடையாளமான சிலுவையை உற்றுநோக்கி இறைவனின் அன்பின் ஆழத்தை உய்த்துணர்வோம். சிலுவையின் வழியில் எமது மீட்பையும் பிறரன்பின் மீட்டையும் கண்டடைவோம். இறையன்பின் காட்சிகளாக வாழ்வின் இறையன்பின் கருவிகளாக மாறுவோம். சிலுவையின் வழியில் நிறை வாழ்வைக் கண்டடைவோம்.

பங்குனி 25

# கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு பெருவிழா



**மீட்பரின் தாயாகத் தன்னை இறைவன் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை அறிந்தவுடன் முழுமன சம்மதத்துடன் அன்னை மரியா தம் ஒப்புதலை தருகிறார். அக்கணமே இறைவார்த்தை அன்னை மரியாவின் கருவில் உடல் எடுத்தது.**

**"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்." (யோவா 15:16)**

காலம் கனிந்தபோது கடவுளின் திட்டம் வானதூதர் வழியாக அன்னை மரியாவுக்கு மங்கள வார்த்தை வடிவில் வெளிப்படுத்தப்பட்டதை நினைவுகூரும் விழா இது. இவ்விழா கடவுள் நம்முன் ஒருவரானார் என்பதை உணர்த்துகிறது. "வார்த்தை மரியாவின் மகனானதும், மரியா கடவுளின் தாயானதும் இவ்விழா" என்று திருத்தந்தை ஆறாம் பவுல் கூறுகிறார். இதை ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி மறை உண்மை வாயிலாக செபமாலையில் நாம் நினைவுகூருகிறோம். மூவேளை செபத்தில் "வார்த்தை மனிதரானார் நம்மிடையே குடிகொண்-டார்" என்று நாம் செபிக்கிறோம். 431இல் நடை-பெற்ற எபேசு சங்கத்திற்குப் பிறகு இந்த விழா திருச்சபையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

குழந்தை பிறப்பு அறிவிப்பு ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ (ஆகார், தொ.நூ 16:7) அல்லது ஒரு குடும்பத்திற்கோ (ஆபிரகாம், சாரா) அறிவிக்கப்படும்போது, அதற்கென்ற ஒரு அமைப்பு முறையை அது கொண்டிருக்கிறது. அந்த அமைப்பில் ஐந்துபடி முறைகள் இருக்கின்றன.

முதலாவது இறைத்தூதரின் தோற்றம் அல்லது இறைவனின் தோற்றம் (லூக் 1:26) இரண்டாவது தோற்றத்தின் விளைவினால் அச்சம் அல்லது நெடுஞ்சாண்கிடையாய்ப் படுத்தல் (லூக் 1:29)

மூன்றாவது செய்தி அறிவிக்கப்படல். இதில் செய்தி பெறுபவர் பெயர் சொல்லி அழைக்கப்படுவார், அவருடைய சிறப்பான தன்மை பற்றிய குறிப்பு தரப்படும். அஞ்சாதே என்ற வேண்டுகோள், பெண் கருத்தாங்குவார் அல்லது கருத்தாங்கி இருக்கிறார். அவர் ஆண் அல்லது பெண் குழந்தையைப் பெற்றெடுப்பார், குழந்தைக்குச் சூட்டவேண்டிய பெயர், பெயரின் வேர்ப் பொருள், மற்றும் மீட்பு வரலாற்றில் குழந்தையின் வருங்கால சாதனைகள் இருக்கும் (லூக் 1:30, 1:28, 1:30, 1:31, 1:32,33,35)

நான்காவதாக, கலக்கம், தயக்கம், எதிர்வினா அல்லது அடையாளம் ஒன்று வேண்டல்(லூக் 1:34) இருக்கும்.ஐந்தாவதாக செய்திதருபவருக்குத் தெளிவோ, அடையாளமோ அளிக்கப்படல் (லூக் 1:36-37).

பிறப்பு அறிவிப்பில் சிலவற்றில் இந்த அத்தனை அம்சங்களும் இடம்பெறும். அதே வேளையில் சில அம்சங்கள் இடம்பெறாமல் போவதும் உண்டு. ஆனால் இந்த அனைத்துமே கிறிஸ்து பிறப்பு அறிவிப்பிலே இருக்கிறது.

மீட்பரின் தாயாகத் தன்னை இறைவன் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை அறிந்தவுடன் முழுமன சம்மதத்துடன் அன்னை மரியா தம் ஒப்புதலை தருகிறார். அக்கணமே இறைவார்த்தை அன்னை மரியாவின் கருவில் உடல் எடுத்தது.

**தம்மைத் தேர்ந்துகொள்ளும் இறைவனை நம்பி இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழும் எல்லோருள்ளும் இறைமகன் பிறக்கிறார்.**

# கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பங்கு புதுப்பித்தற் செயற்திட்டம்

# சிறிய கிறிஸ்தவ குழுக்கள்

## பங்கு புதுப்பித்தற் செயற்திட்டம் என்றால் என்ன?

❖ திருத்தூதர் பணிகள் நூல் (2:42-47, 4:32-37) இல் குறிப்பிட்டுள்ள நம்பிக்கை கொண்டோரையே அடிப்படைக் கிறிஸ்தவ ஒன்றியம் அல்லது சிறிய கிறிஸ்தவ குழுக்கள் (BCC) எனக் குறிப்பிடுகின்றோம். இதன்படி திருச்சபை எனும் போது திருத்தந்தை, கர்தினால், ஆயர், குருக்கள் துறவிகள் பொது நிலையினர் அனைவரையும் குறிக்கும்.

❖ நாம் நன்கறிந்த, நமக்கு தெரிந்த அருகாமையில் உள்ள திருச்சபை என்றால் அது சிறிய கிறிஸ்தவ குழுக்களாகும். (SCC)

❖ இந்த சிறிய கிறிஸ்தவ குழுக்கள் ஆலய சபை அல்லது பங்குச்சபைபோன்று பாரியதொன்று அல்ல.

❖ பதினைந்து அல்லது இருபது குடும்பங்கள் ஒன்றிணைந்து நம்பிக்கைக்கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முயற்சிப்பார்களாயின் அது உயிருட்டமிக்க திருச்சபை அல்லது, **சிறிய கிறிஸ்தவ குழுவாகும்.**

❖ **திராட்சை கொடியும் அதன் கிளைகளும் போலவே (புனித. யோவான் 15:1–5) ஒரே உடலின் உறுப்புகளாய்,** (1 கொரிந்தியர் 12:12-31) உயிர்த்த கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து, வாழும் மக்களும் சிறிய கிறிஸ்தவ குழுக்களேயாகும்.

❖ **கிறிஸ்துவின் மறைபொருளாகிய உடலுக்குச் சான்று பகர்ந்து, நம்பிக்கையோடு,** ஒன்றிணைந்து, ஒருவர் ஒருவருக்கு உதவியாக, பகிர்ந்துகொண்டு, சேவை செய்து உண்மையான உயிரோட்டமிக்க சபையை அனுபவித்திட முடிவது அதிகளவிலான மக்களைக் கொண்ட குழுவினரே என்பது நிதர்சனமான உண்மை.

❖ பங்குபற்றும் மக்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள மற்றும் அறிந்துகொள்ளவும் மிகவும் இலகுவானதாகக் இருக்கும்.

❖ **கிறிஸ்தவ குழுமத்திற்குள், சில குடும்பங்கள் ஒன்றிணைந்தால் உயிரூட்டமிக்க சபையை அனுபவித்திட முடியும்.**

❖ இவ்வாறு சிறிய குழுக்கள் ஒன்றிணைவதால் **முழு திருச்சபையும் உயிரூட்டம் பெறுகிறது.**

❖ **சிறிய கிறிஸ்தவ குழுக்கள் என்பது இயேசு கிறிஸ்துவை அடித்தளமாகக் கொண்ட, அவரில் பிணைந்த, ஒன்றிணைந்த, சிறு குழுவாக அமைந்த, நம்பிக்கை கொண்டோரைக் கொண்ட உண்மையான உயிருள்ள கிறிஸ்தவ சபையாகும்.**

## கருப்பொருள்:

**"சிறிய கிறிஸ்தவ குழுக்கள் ஊடாக கிறிஸ்தவ வாழ்வில் புதுப்பித்தல் நோக்கிச்செல்வோம்"**

**1. நோக்கு** "கிறிஸ்துவை மையமாகக் கொண்டு அவரின் பணியைத் தொடர்ந்தாற்றும் ஒரு சமூகம்"

**2. திருவிவிலிய அடித்தளம்** "நாம் பலராய் இருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கின்றோம்." (ரோமர் 12/5)

**3. இலக்கு:** நாம் புதிதாகத் திருச்சபையை அனுபவித்தல் - "பங்கேற்கும் திருச்சபை" "குழுக்களுக்கிடையிலான ஒறுமைப்பாடு"


**4. இறையியல்** திருமுழுக்கின் மூலம் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கு செயற்பாட்டோடு பதிலளித்தல்.

**4.1 மும்முனைச் செயற்பாடுகள் (முப்பணிகள்)**

1. தூயதன்மை - குருத்துவப் பணி
2. இறைவார்த்தையை எடுத்துரைத்தல் - இறைவாக்குப் பணி
3. பணிபுரியும் தலைமைத்துவம் - அரசபணி (மேய்ப்பனுக்குரியபணி)

**5. ஆன்மீகம்** முப்பணிகளின் செயற்பாடோடு பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் ஆன்ம இரட்சிப்பு

**5.1** மனித உறவுகளை ஏற்படுத்தி கட்டியெழுப்புதல், அதனை மேலும் மெருகூட்டி மேம்படுத்திடல் மற்றும் பராமரித்திட ஒத்துழைத்தல்.




**5.2** திருவருட்சாதனங்கள், கிறிஸ்தவ பாரம்பரியங்கள், வேதாகமம் போன்றவற்றின் மூலம் பரிசுத்தமான வாழ்வை நோக்கிச் செயற்படல்.

**6. ஏழு அடிப்படைப் பண்புகள் (சிறப்பியல்புகள்)**

**6.1** ஒரே பகுதியில் வசிக்கும் அயல் குடும்பங்களுடன் ஒற்றுமையாக இருத்தல்.

**6.2** அவர்களோடு ஒரே நம்பிக்கையை பகிர்ந்து கொள்ளல்.

**6.3** கிறிஸ்துவை மையப்படுத்தி குழுவாழ்வு.

**6.4** இறை வார்த்தையை பகிர்ந்துகொள்ளல்.

**6.5** திருமுழுக்கின் அழைப்பிற்கேற்ப பொது-நிலையினர் செயற்பாட்டுடன் பங்கு கொள்ளல்.

**6.6** திருவருட்சாதங்களின் ஊடாக புனித வாழ்வை வாழ்தல்.

**6.7** உலகளாவிய திருச்சபையுடன் இணைந்திருத்தல்

**7. பங்கின் புதுப்பித்தல் செயற்பாட்டுத் திட்டங்கள்**

பங்கின் அனைத்து சிறிய குழுக்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட / இரு அங்கத்தவர்கள் (வழிநடத்துபவர்கள், ஊக்குவிப்பாளர்கள்) / பங்கு தந்தை / பங்கின் உதவி அருட்தந்தை உடன் இணைந்து வாரத்திற்கு ஒரு முறை ஆலய மண்டபத்தில் செப கூட்டம் ஒன்றில் ஒன்றுகூடுவது (Prayer Meeting) மிகச் சிறந்தது.

**7.1** இவ்வொன்றுகூடலை செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமைகளில் நடத்துவது சிறந்தது.

**7.2** ஒன்றுகூடலின் நேரத்தினை வசதிக்கேற்ப ஒருமித்து முடிவெடுத்துக்கொள்ளலாம்.

**7.3** ஒன்றுகூடலின் நாள் மற்றும் நேரத்தை அடிக்கடி மாற்றம் செய்யாதிருத்தல் சிறந்தது.

**7.4** செப ஒன்றுகூடல் ஞாயிற்றுக்கிழமையின் அன்றைய இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு தியானிக்கலாம். எனவே இதில் பங்குபற்றும் அனைவரும் திருவிவிலியத்தினை அன்று கொண்டுவருவது சால சிறந்தது.

**7.5** செப ஒன்றுகூடலை ஒரு மணி நேரத்திற்குள் அமைத்துக்கொள்வது சிறந்தது.

**7.6** செப ஒன்றுகூடலின் உள்ளடக்கத்தினை பின்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்.

### ஏழாவது படிகள்

**முதல் 15 நிமிடங்கள்**

**7.6.1** தூய ஆவியானவரின் பாடல்

**7.6.2** ஆரம்ப செபம்

**7.6.3** திருச்செபமாலை 2 காரணிக்கங்கள் மற்றும் பிரார்த்தனை, (வழிபாட்டு காலங்களுக்கு ஏற்ற வகையிலான விரும்பிய பக்தி முயற்சிகளிலும் ஈடுபட முடியும்.)

**அடுத்த 30 நிமிடங்கள்**

**7.6.4** ஞாயிற்றுகிழமையின் இறைவார்த்தையை வாசித்தல், தியானித்தல், சிந்தித்தல் மற்றும் கலந்துரையாடல்.

பங்குத்தந்தை அல்லது உதவி பங்குத்தந்தை, அருட்சகோதர, சகோதரிகள் அல்லது பங்குத்தந்தையின் அனுமதி கொண்ட திருவிவிலியத்தை பற்றிய போதிய அறிவுகொண்ட யாரேனும் ஒருவரால் இதனை முன்னெடுத்து நடத்த முடியும்.

**இறுதி 15 நிமிடங்கள்**

**7.6.5** சிறிய கிறிஸ்தவ குழுக்கள் தொடர்பில் கலந்துரையாடல், எதிர்கால நிகழ்வுகளைத் திட்டமிடல், ஏற்படும் சவால்கள் மற்றும் பங்களிப்புகளை பகிர்ந்துகொள்ளல்.

**7.6.6** நன்றி செபம்

**7.6.5** நன்றி பாடல்

**8. சிறு கிறிஸ்தவ குழுக்களின் செயற்பாடுகள்**

SCC Action Plan

சிறு கிறிஸ்தவ குழுக்கள் (ளூஊஊ) தங்கள் ஊக்குவிப்பாளர்களுடன் வாரத்திற்கு ஒருமுறை ஒன்றுகூடுவது சிறந்ததது.

**8.1** வாரத்தின் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமைகளில் ஒன்றுகூடுவது ஏற்றது.

**8.2** ஒன்றுகூடலின் நேரத்தினை வசதிக்கேற்ப அமைத்துக்கொள்ளலாம்.

**8.3** ஒன்றுகூடும் இடம் பொது இடமாகவோ (பொது மண்டபம், நூலகம், இடவசதியுள்ள ஓர் இல்லம், வெளியிடம்) அல்லது வாரத்திற்கு ஒரு வீடாக அமையலாம்.

**8.4** ஒன்றுகூடலின் தினத்தை மற்றும் நேரத்தை அடிக்கடி மாற்றம் செய்யாதிருத்தல் சிறந்தது.

**8.5** சிறிய குழுக்களின் ஒன்றுகூடல் (SCC Meeting) ஞாயிறு தின இறைவார்த்தையை அடிப்படையாக கொண்டிருத்தல் ஏற்றது. எனவே அனைத்து குடும்பத்திற்கும் / அனைத்து அங்கத்தவரிடமும் திருவிவிலியம் இருப்பது சாலச்சிறந்தது.

8.6 செப ஒன்றுகூடல் ஒரு மணி நேரத்திற்குள் அமைவது ஏற்றதாகும்.

♦ செப ஒன்றுகூடலின் உள்ளடக்கம் இவ்வாறு அமையலாம்.

♦ ஒன்றுகூடலை வழிநடத்தும் ஒருவரை வாராந்தம் தெரிவுசெய்திட முடியும்

### பதினைந்தாவது படிகள்

**முதல் 15 நிமிடங்கள்**

**8.7.1** தூய ஆவியானவரின் பாடல்

**8.7.2** ஆரம்ப செபம் - வழிநடத்துபவர்

**8.7.3** திருச்செபமாலை 2 காரணிக்கங்கள் மற்றும் பிரார்த்தனை, (வழிபாட்டு காலங்களுக்கு ஏற்ற வகையிலான விரும்பிய பக்தி முயற்சிகளிலும் ஈடுபட முடியும்.)

**அடுத்த 30 நிமிடங்கள்**

**8.7.4** ஞாயிறு தின நற்செய்தியை வாசித்து தியானித்தல் - வழிநடத்துபவர்.

**8.7.5** சிறிது நேரம் அமைதியாக இறைவார்த்தை தியானித்தல்.

**8.7.6** ஞாயிறு தின நற்செய்தியை இரண்டாம் முறை வாசித்து தியானித்தல் - அங்கத்தவர் ஒருவர்.

**8.7.7** தங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தையை அல்லது வாக்கியத்தை மீண்டும் வாசித்தல். (விரும்பியவர்கள் மட்டும்).

**8.7.8** தங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தையை ஏனைய அங்கத்தவர்களோடு பகிர்ந்துகொள்ளல். (மறையுரையாக அல்ல தியானிக்கும் முகமாக) (விரும்பியவர்கள் மட்டும்).

**8.7.9** குழுவின் ஊக்குவிப்பாளர் அந்த நாளுக்கான நற்செய்தியை பகிர்ந்துகொள்வார் (பங்கு தந்தையுடனான சந்திப்பின்போது கிடைத்த அனுபவத்தை ஊக்குவிப்பாளர் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளலாம்).

**8.7.10** "வாரத்தின் செய்திக்கேற்ப" செயற்திட்டத்தை திட்டமிடல் - வழிநடத்துனர் ∴ ஊக்குவிப்பாளர்

**8.7.11** "வாரத்தின் செயற்பாட்டிற்கேற்ப" திட்டமிடல் - வழிநடத்துனர் மற்றும் ஊக்குவிப்பாளர். அவ்வாரத்தின் செயற்பாடுகள் தனிப்பட்ட ரீதியாவோ அல்லது குழு ரீதியாகவோ அமையலாம்

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**தொகுப்பு:**

**விசுவாச ஊக்குவிப்பு மனித உறவு இறைப்பணிக் குழு, கொழும்பு உயர் மறைமாவட்டம். ஜனவரி 2021.**

தூய சூசையப்பர் இயேசுவின் வளர்ப்புத் தந்தை மட்டுமே என்பதால் முதல் மூன்று நூற்றாண்டுகளில் பெரும்பாலும் மறக்கப்பட்ட புனிதராகவே இருந்தார். கி.பி 2ம் நூற்றாண்டில் இறையன்னை மரியாவின் கன்னித்தன்மையை காக்கின்ற விதத்தில் தூய சூசையப்பர் வயதில் முதிர்ந்தவராகச் சித்தரிக்கப்பட்டார். 4ம் நூற்றாண்டில் முதன் முதலாக எகிப்து நாட்டு கோப்திய கிறிஸ்தவர்கள் "தச்சரான தூய சூசையப்பர்" என்ற விழாவை அவரது இறந்த நாளை அடிப்படையாகக் கொண்டு ஆடி மாதம் 20ஆம் திகதி கொண்டாடியதாக அறிகின்றோம். 440ஆம் ஆண்டளவில் தோன்றிய "தச்சரான தூய சூசையப்பரின் வரலாறு" என்ற நூல் பல்வேறு புனைவுகளுடன் தூய சூசையப்பர் குறித்த தகவல்களை வழங்குகின்றது.

7ஆம் நூற்றாண்டில் செலில்லே ஆயராக இருந்த புனித இசிதோர் (636) அன்னை மரியாளுக்குப் பின் அனைத்து புனிதர்களுக்கும் மேலானவராக இவர் திகழ்கின்றார் என்று அவரது மேன்மையை எடுத்துரைக்கின்றார். அன்னை மரியாளின் கணவரானதால் இவர் மிகவும் மேலான மகத்துவம் பெற்றுவிட்டார். அன்னை மரியாள் எந்த இடத்தில் கடவுளால் வைக்கப்பட்டாரோ அதற்கு நிகரான ஒருவராக இவர் இருக்கின்றார். அவருக்கு தந்தைக்குரிய அன்பு, ஆளுமை ஆகியவற்றையும் அவருக்கே உரிய காப்பாளர் பணியையும் கடவுள் அளித்திருந்தார். அவரின் பெயரே

## தூய சூசையப்பரின் யூபிலி ஆண்டையொட்டிய சிறப்புத் தொடர் – 3

**(08.12.2020 - 08.12.2021)**



ஆக்கம். அருட்சகோ.
R. ஜோசப் ஜெயகாந்தன்.

# தூய சூசையப்பரின் திருநாள் பங்குனி – 19

அவரது மேன்மை மற்றும் தூய செயற்பாடுகளைப் பறைசாற்றுகின்றது என்று தமஸ்கு புனித யோவான் கூறுகின்றார். கி.பி 800இல் தான் மேற்கத்தைய திருச்சபையில் புனிதர்கள் பட்டியலில் இவரின் பெயர் முதன் முதலாக இடம்பெற்றது எனலாம்.

9ஆம் நூற்றாண்டில் இத்தாலியின் மிலான் நகருக்கு அருகில் கட்டப்பட்ட "சாந்தா மரியா" ஆலயத்தில் வரையப்பட்ட சுவரோவியமே இவரின் முதல் செலியமாகக் கருதப்பட்டது. தூங்கிக் கொண்டிருக்கும் தூய சூசையப்பருக்கு வானதூதர் செய்தி வழங்குவது போன்று அந்தக் காட்சி வரையப்பட்ட பிறகே மற்ற ஆலயங்களில் தூய சூசையப்பரின் திருவுருவங்கள் இடம்பெறத் தொடங்கின என்பது வரலாறு.

அன்னை மரியாளுக்கு அடுத்ததாக ஆண்டவரிடம் செல்வாக்குப் பெற்ற புனிதராக இவர் இருக்கின்றார் என்ற கருத்தியல் 13ஆம் நூற்றாண்டில் ஆழமாக வேரூன்றியதால் அவரது பக்தி மேற்கத்திய நாடுகளில் வேகமாக வளர்ச்சி அடைந்து 1414இல் கூடிய கொன்ஸ்தான்ஸ் பொதுச்சங்கத்தில் இவர் குறித்து இறையியலாளர் ஜெர்சோன் வழங்கிய இறையியல் பார்வை திருச்சபையில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது இறையியல் பார்வை பின்வருமாறு அமைந்தது. தூய சூசையப்பர் "தாயின் வயிற்றில் இருந்தபோதே தொடக்கப் பாவத்தில் இருந்து புனிதமாக்கப் பெற்றார். இறப்பிற்குப் பின்பு உடலோடும் ஆன்மாவோடும் விண்ணேற்பு அடைந்தார்". 1480இல் திருத்தந்தை 4ஆம் சிக்ஸ்துஸ் இவரது திருவிழாவை உரோமை திருவழிபாட்டு நாட்காட்டியில் சேர்த்தார். 1481ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி தொடக்கம் உரோமாபுரியில் சிறப்பிக்கப்பட்ட இவ்விழாவை 1570இல் திருத்தந்தை 5ஆம் பத்திநாதர் திருச்சபை முழுவதற்கும் விரிவுபடுத்தினார்.

தூய சூசையப்பரின் முதல் மன்றாட்டு மாலை 1597இல் உரோமாபுரியில் வெளியானது. 1621ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8ஆம் திகதி திருத்தந்தை 15ஆம் கிரகோரி தூய சூசையப்பரின் விழாவைக் கடன் திருநாளாக மாற்றினார். 19ஆம் நூற்றாண்டில் பங்குனி மாதம் முழுவதும் இவருக்கு சிறப்பு வணக்கம் செலுத்துகின்ற வழக்கம் தோன்றியது. 1870ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8ஆம் திகதி திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் தூய சூசையப்பரை "உலகளாவிய திருச்சபையின் புரவலர்" (பாதுகாவலர்) என அறிவித்தார். 1889இல் திருத்தந்தை 13ஆம் லியே திருச்சபை முழுவதும் இவரின் வணக்க மாதத்திற்கு அங்கீகாரம் வழங்கினார்.

18ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்த வீரமாமுனிவர் (1747) தூய சூசையப்பரை தலைவராகக் கொண்டு "தேம்பாவனி" காப்பியத்தைப் படைத்ததோடு அவருக்கு "வளனார்" என்ற அற்புதமான தமிழ்ப்பெயரையும் சூட்டி மகிழ்ந்தார். மண்ணகத்தில் முப்பது ஆண்டளவாக தமது பெற்றோருக்கு பணிந்து நடந்த இயேசு தற்போது விண்ணகத்தில் தம்மிடம் இவர் கேட்கும் அனைத்து வரங்களையும் பொழிந்து வருகின்றார். 19ஆம் நூற்றாண்டு இவரின் பக்தியின் பொற்காலமாக அறியப்படுகின்றது. அவரை புனித ஜோசேப்பர் என மரியாதையாக அழைக்கும் வழக்கத்தில் இருந்து "சூசையப்பர்" என்ற மருவல் பெயர் அக்காலத்திலேயே தமிழில் தோன்றியது. 1850ஆம் ஆண்டளவில் ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் மத்தியில் தூய சூசையப்பரின் செபமாலைப் பக்தி அறிமுகமானது. 1893இல் தூய சூசையப்பரின் உத்தரியத்தை அனைத்து கிறிஸ்தவர்களும் அணிய திருவழிபாட்டுப் பேராயம்

**தூங்கிக் கொண்டிருக்கும் தூய சூசையப்பருக்கு வானதூதர் செய்தி வழங்குவது போன்று அந்தக் காட்சி வரையப்பட்ட பிறகே மற்ற ஆலயங்களில் தூய சூசையப்பரின் திருவுருவங்கள் இடம்பெறத் தொடங்கின என்பது வரலாறு.**

அனுமதி வழங்கியது.

20ஆம் நூற்றாண்டில் சோசலிச, கம்யூனிச கொள்கைகளுக்கு எதிரான பாதுகாவலராக இவர் முன்னிறுத்தப் பெற்றார். திருத்தந்தையர்களான 15ஆம் ஆசீர்வாதப்பர் 11ஆம் பத்திநாதர், 12ஆம் பத்திநாதர் போன்றோர் கம்யூனிசத்தின் பிடியில் சிக்காமல் தப்பிக்க இவரின் பாதுகாவலை வேண்டுமாறு கிறிஸ்தவர்களை அறிவுறுத்தினார். 1950களில் ஸ்பெயின், கனடா, இத்தாலி போன்ற நாடுகளில் "யோசேப்பியல்" என்ற புதிய இறையியல் துறை தோன்றியது. 1958ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த மேரி எப்ரேம் என்ற அருட்சகோதரிக்கு காட்சியளித்த தூய சூசையப்பர் "இயேசுவோடும் அன்னை மரியாளோடும் எனது வாழ்வை நினைவுகூரும் வகையில் முதல் புதன்கிழமைகளில் மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளைத் தியானித்து செபமாலை செபியுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார். அந்தக் காட்சிக்குப் பின்பு தூய சூசையப்பருக்கான முதற் புதன்கிழமை பக்தி முயற்சி திருச்சபை முழுவதும் முக்கியத்துவம் பெற்றது.

1955இல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் தொழிலாளராக தூய சூசையப்பரின் விழாவை வைகாசி மாதம் முதலாம் திகதி சிறப்பிக்கும் விதத்தில் அறிமுகம் செய்தார். 1962ஆம் ஆண்டு திருத்தந்தை 23ஆம் அருளப்பர் திருப்பலியின் முதல் நற்கருணை மன்றாட்டில் இவரின் பெயரைச் சேர்த்துக் கொண்டார்.



1969ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் சீரமைத்த நாட்காட்டியின் படி அன்னை மரியாளின் கணவரான தூய சூசையப்பரின் திருவிழாவை பங்குனி மாதம் 19ஆம் திகதி திருச்சபையானது பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது.

2013ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி திருச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் தனது ஆட்சி முத்திரையில் தூய சூசையப்பரைக் குறிக்கும் லில்லி மலரை இடம்பெறச் செய்தார். உறங்கும் தூய சூசையப்பர் பக்தி உலகில் பல இடங்களுக்கும் பரவுவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ்சின் அனுபவமே காரணம் என்பது உண்மை. 2013ஆம் ஆண்டு வைகாசி முதலாம் திகதி திருப்பலியின் மற்ற நற்கருணை மன்றாட்டுகளிலும் இவரின் பெயரை திருத்தந்தை பிரான்சிஸ் இணைத்தார். 2020ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8ஆம் திகதி "தந்தையின் இதயத்தோடு" என்ற திருத்தூது மடலை வெளியிட்ட அவர் அன்றுமுதல் 2021ஆம் ஆண்டு மார்கழி 8ஆம் திகதி வரை "தூய சூசையப்பரின் ஆண்டாகச்" சிறப்பிக்க ஆணையிட்டார்.

இதன்படி கத்தோலிக்க திருச்சபையானது பங்குனி மாதம் 19ஆம் திகதி அன்னை மரியாளின் கணவரான தூய சூசையப்பரின் திருவிழாவை, வெகுவிமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றது. தவக்காலத்தில் சிறப்பிக்கப்படும் இருபெருவிழாக்களில் ஒன்றாக இத்திருநாள் அமைந்துள்ளது. மற்றையது அன்னை மரியாளுக்கு கிறிஸ்துவின் பிறப்பு அறிவிக்கப்பட்ட பெருவிழா. இது தூய சூசையப்பருக்கு திருச்சபை வழங்கும் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகின்றது.

நாம் செலுத்தும் பக்தி வணக்கமானது ஒரு மரத்திற்கு ஒப்பானது. இந்த மரத்தின் வேரானது நமது மனதில் உள்ள பாசம், இதன் மலர்கள் பக்தியால் வருகின்ற செபமும் மன்றாட்டும். இதன் காய் கனிகள் தூயவர்களைப் பின்பற்றுதல் ஆகும். மலர்கள் மலர்ந்து கனிகளை வழங்காவிட்டால் எந்தப் பயனும் இல்லாதது போல கிறிஸ்தவர்கள் தூய சூசையப்பரின் புண்ணிய வாழ்வு வாழாவிட்டால் எந்தப் பயனும் இல்லை. எண்ணிக்கையில்லா கிறிஸ்தவர்கள் இம்மாதத்தினை தூய சூசையப்பருக்கு ஒப்புக்கொடுப்பது போல நாமும் எம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து அவரின் ஆசீரைப் பெறுவோம். அவரின் திருநாளாகிய இன்று சொல்ல வேண்டிய செபம்.

**தந்தையாகிய தூய சூசையப்பரே!**
**உமது அடியவர்களாகிய எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**தந்தையாகிய தூய சூசையப்பரே!**
**உமது சீர்களாயிருக்கின்ற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**தந்தையாகிய தூய சூசையப்பரே!**
**உமது குழந்தைகளாகிய எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

இன்றைய நாளிலே சிறப்பாகச் செய்ய வேண்டியது. வீட்டிலோ, ஆலயத்திலோ, தொழில் புரியும் இடத்திலோ, தெருவிலோ இருக்கும் தூய சூசையப்பரின் திருச்சுரூபத்தை துப்பரவாக்கி, அலங்கரித்து மேற்கூறப்பட்டுள்ள செபத்தைச் சொல்லுவோம். உங்கள் அனைவருக்கும் தூய சூசையப்பரின் திருநாள் வாழ்த்துக்களும், செபங்களும்.

தொடரும்...



இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள். ▸▸பேதுரு◂◂

# இறைவார்த்தை வழிபாடு

## தவக்காலத்தின் 5வது ஞாயிறு (21.03.2021)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் ஐந்தாவது வாரத்தின் முதல் நாளில் அன்புப் பலி செலுத்த இறை இல்லத்தை நாடி வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களாகிய நமக்கு இன்றைய இறைவார்த்தைகள் நல்ல சிந்தனையை தருபவையாக அமைந்துள்ளன. இயேசு தம் வாழ்க்கையை கோதுமை மணிக்கு ஒப்பிடுகின்றார். அது எவ்வாறு நிலத்தில் விழுந்து மீண்டும் உயிர்பெற்று பயிராகிறதோ அதுபோல இறைமகன் இயேசுவும் இறந்து உயிர்த்தெழுவார். இயேசுவின் இறப்பிலே ஒரு புதிய சமுதாயம் உருப்பெறும். அவர் உயிர்த்த பின் அனைவரும் ஒரே கடவுளின் மக்களாக அழைக்கப்படுவர். இயேசுவைப் போல அவரது சீடர்களும் தங்களையே வெறுமையாக்கிக் கொண்டு பிறருக்காக வாழ இயேசு அழைப்பு விடுக்கின்றார். தம் வாழ்வை நேசிக்கிறவர்கள் அதை இழக்கின்றார்கள். இயேசு கனிகளை வழங்குவதற்காக சிலுவையில் இறந்தார். அவரோடு உயிர்த்தெழுவதற்கும் அவரோடு சேர்ந்து கனி கொடுப்பதற்கும் நாம் அவரைப் பின்பற்ற வேண்டும். தமக்காகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் வாழ்வோர் இழந்துவிடுவார்கள் என்றும், தம் வாழ்வை ஒரு பொருட்டாக கருதாதோர் அதைக் காத்துக் கொள்வார்கள் என்று நற்செய்தி கூறுகின்றது. நாமும் நமது வாழ்வை கோதுமை மணியாக்கி வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எரே 31: 31-34**
புதிய உடன்படிக்கை செய்துகொள்வேன், பாவங்களை நினைவுகூரமாட்டேன்.

**பதிலுரைப் பாடல் : தி.பா 51: 1-2. 10-11. 12-13**
கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.

**இரண்டாம் வாசகம் : எபிரே 5: 7-9**
கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார், அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
“எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்,” என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம் : யோவா 12: 20-33**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவன் காலத்திற்கு ஏற்றாற்போல் மக்களின் மனநிலையை உணர்ந்து அவர்களின் நிலைகளுக்கு இறங்கி வந்து தன் அன்பினை வெளிப்படுத்துவது போல் திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர் அனைவரும் இறைமக்களுக்காக தம் அன்பையும் பணிவாழ்வையும் அதிகமதிகமாக வழங்கிட வரமருள வேண்டுமென்று...

நமது நாட்டில் வாழும் நாம் அனைவரும் பின்பற்றும் நான்கு பிரதான மதங்களும் அன்பைப் போதிக்கின்றன. கடவுளும் நம்மை அன்பு செய்கின்றார். கடவுள் நம்மை அன்பு செய்வது போல் நாமும் பிறரை அன்பு செய்ய வேண்டும். எனவே நாட்டின் மக்களும் எந்தவித பாகுபாடு பாராமல் எல்லாரும் எல்லோரையும் அன்பு செய்து வாழ வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

மனமாற்றம் என்பது கடவுளின் அன்பை உணருவதும் ஏற்றுக்கொள்வதும் அதன் வழியாக கடவுளின் அன்புக்கு விரோதமாக செய்த பாவங்களை ஏற்று அப்பாவங்களுக்காக மனம் வருந்தி கண்ணீர் சிந்தி நமது பாவங்களை நன்றியின் பலியாக ஒப்புக் கொடுப்பதாகும். கடவுள் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறார் என்பதை உணர்ந்தவர்களாக நாம் வாழ வரமருள வேண்டுமென்று...

எமாக ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று எமது பாவங்களுக்காக மரித்து புதுவாழ்வுக்காக இயேசுவுடன் உயிர்த்து அவரின் உண்மையான சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று...

## ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு (28.03.2021)

**வாசகவிளக்கம்:** ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு திருவழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே திருஅவையின் இறைமக்களே இயேசு ஜெருசலேமிற்குள் நுழைந்தபோது மிகப் பெரிய மக்கள் கூட்டம் அவரை வரவேற்க காத்திருந்தது. அக்கூட்டத்தில் அந்நகரைச் சேர்ந்தவர்கள் மட்டுமில்லாது பரிசேயர்கள் திருவிழாவிற்கு வந்தவர்கள் மற்றும் இயேசுவின் புதுமைகளைக் கேட்டு அவரை நாடி வந்தவர்கள் என பலவகையான மக்கள் இருந்தனர் அவர்கள் ஓசான்னா தாவீது அரசனின் மகன் வாழ்க என்று ஆர்ப்பரித்து கூக்குரலிட்டனர். இன்று முதல் நாம் பரிசுத்த வாரத்தில் கால்பதிக்கின்றோம். இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு போன்ற மறைஉண்மைகளை சிந்திக்கின்றோம். இயேசு பாடுகளையும் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் அவற்றிக்கு புதிய விளக்கத்தையும் பொருளையும் கொடுக்கின்றார். இயேசு பிறந்தது முதல் இறக்கும் வரை துன்பத்தை எதிர்கொண்டார். ஆனால் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். துன்பத்தை விட்டு அவர் விலகி ஓட நினைத்ததில்லை. இன்று நாம் பல்வேறு பிரச்சினைகளாலும் சமுதாய சீர்கேடுகளாலும் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நாம் பாடுகளை சந்திக்கின்றோம். ஆயினும் இறைவனின் அருள் இருக்கும் வரை எமது பயணத்தை தொடர்கின்றோம். இயேசுவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக அழுவதைக் காட்டிலும் அவர் நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றுவோம். அவரது பாடுகள் நமக்குத் தரும் பாடங்களை கற்றுக் கொள்வோம். இதற்காக அருளை வேண்ட வழிபாட்டில் பங்குபற்றுவோம்.

**முதல் வாசகம் : எசா 50: 4-7**
நிந்தனை செய்வோர்க்கு என் முகத்தை மறைக்கவில்லை. இழிநிலையை நான் அடைவதில்லை என்று அறிவேன்.

**பதிலுரைப் பாடல் : தி.பா 22: 7-8. 16-17. 18-19. 22-23**
என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?

**இரண்டாம் வாசகம் : பிலி 2: 6-11**
கிறிஸ்து தம்மையே தாழ்த்திக்கொண்டார் எனவே கடவுளும் கிறிஸ்துவை உயர்த்தினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

**நற்செய்தி வாசகம் : மாற்கு 14: 1- 15: 47**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறை எழுச்சியுடன் கொண்டாடும் நாம் பரிசுத்த வாரத்தில் கால்பதிக்கின்றோம் என்பதை உணர்ந்தவர்களாக உண்மையான மனமாற்றத்தின் அடையாளமாக ...

எமது நாட்டின் அரசியல் தலைவர்களும் சமூக பொறுப்பில் உள்ளவர்களும் பிறர் துன்பத்தில் குளிர்காய்வதை விட்டு விட்டு, பிறரின் துன்பங்களைக்கண்டு துடிக்கும் உள்ளம் கொண்டவர்களாக பிறரின் துன்பத்தில் முழுமையாக பங்குகொள்ளும் ஆர்வம் உள்ளவர்களாக வாழவும், நாமும் பிறரின் நல்வாழ்வுக்காக நமது செப தப பரித்தியாகங்களால் உதவும் கரங்களாகச் செயல்படவும் வரமருள வேண்டுமென்று...

இயேசுவை பின்தொடரும் மக்களாகிய நாமும் எம்முடைய அன்றாட வாழ்வில் நிலையற்ற இன்பங்களுக்காக, நிரந்தரமான வாழ்வையும், உறவுகளையும், நல்ல இலட்சியங்கள், கொள்கைகள் யாவையும் இழந்துவிடாமல் சரியானவற்றை தேர்ந்து கொண்டு தூய்மையான வாழ்வை எப்பொழுதும் வாழ்ந்து வர வரமருள வேண்டுமென்று...

தூய வெள்ளி இல்லையென்றால் உயிர்ப்பு ஞாயிறு இல்லை. துன்பம் இல்லை என்றால் இன்பம் இல்லை என்பதை உணரவும், நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜெருசலேம் உண்டு என்பதை உணர்ந்தவர்களாக இயேசுவின் பயணத்தில் பங்கெடுக்கவும், நோய் துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல் துணிவுடன் எமது வாழ்வை நடத்தவும், புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் சமமாய், ஏற்று வாழ்வும் வரமருள வேண்டுமென்று...

# ஊனமுற்றோராய் நிலைவாழ்வில் பிரவேசிப்போம் (மத் 18:8)

எம்மை நாமே ஆராய்ந்து ஆன்மீக சுத்திகரிப்பு செய்ய அருளப்பட்ட அருளின் காலமே இந்த தவக்காலம்.

உலகில் எத்திசையில் வாழநுதாலும் தனிமனிதனாக எந்தவொரு மனித தொடர்புகளையும் சாராமல் எம்மால் வாழ்ந்து விடமுடியாது. எம்மை இவ்வுலகுக்கு அறிமுகப்படுத்திய பெற்றோர் மற்றும் சகோதரர்கள் காலப்போக்கில் நம் குடும்பம், உற்றார் சுற்றார் நண்பரென பல உறவுகள் நம்மைச் சுற்றி சுழன்று வருவது ஓர் யதார்த்தமான நிலையாகும். இந்த சுழற்சிக்குள்தான் பாவம் புண்ணியம், நன்மை தீமை, அன்பு பொறாமை, பாசம் பகை, என இரண்டறக் கலந்த பேரவைகளுடன் தான் நமது அன்றாட வாழ்க்கைப் படகு ஓடிக்கொண்டிருக்கிறது. இதில் நம் ஆன்மீகப் பயணத்தின் உண்மைகள் தெளிவாக்கப்பட வேண்டுமென்று இக்காலம் அழைப்பு விடுக்கிறது. காலத்தின் அழைப்பை நமதாக்கிக் கொள்வோம்.

பாலைவனச் சோதனை ஆழமான விசுவாசம் கொண்ட எம் வாழ்வுக்குள் நுழைந்தாலும் அதனை ஜெயிப்பதற்கும் சாத்தானுக்கு பதில் கொடுப்பதற்கும் திறனற்றவர்களாகின்றோம். வாழ்க்கை ஒட்டத்துக்குள் பொருளாதார நெருக்கடி புயல் காற்றாக வீசியதும் துவண்டு போகின்றோம். இச் சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான் அந்நியனின் பாவக்கரங்களுக்குள் சிக்க வைத்து விடுகின்றது எனலாம். நம் ஒரே கடவுளின் விசுவாசத்தை பலவீனப்படுத்துகிறது.

“உங்களுக்கு காலநேரம் சரியில்லை ஜோதிடரிடம் ஜாதகம் பாருங்கள், அவர்கள் தெய்வங்களுக்கு பூஜைகள் செய்யுங்கள் என நம் விசுவாசத்தை பலவீனப்படுத்தி அவ்விடத்துக்கு கூட்டிச் செல்லும் கைகள் நமக்குத் தேவையா? தீமை செய்வோரிடமிருந்து எனக்கு விடுதலை அளித்தருளும் (தி.பா 59:2) ஆசை வார்த்தைகள் கூறி ஒரே நாளில் செல்வந்தனாகி விடலாம் என்று நம் கைகள் கள்ளக் கடத்தல் பாதைக்கு அழைத்துச் சென்ற சமூக விரோதிகள் கைகள் தேவையா? “தீய நாட்டங்களின் பிடியில் சிக்கிக் கொள்ளாதே” (சீராக் 6:1) என இறைவார்த்தை வலியுறுத்துகிறதே.

கவலையை மறக்கவும், நாள் முழுவதும் இனிமையான சந்தோஷத்தை அனுபவிக்கலாமென போதை வஸ்துக்கு அடிமையாக்கிவிட்ட தீய கரங்களை அகற்றி அவ்வுறவை தள்ளிவிட வேண்டாமா? நாம் வாழ்வு பெறும் பொருட்டு அவர் சாவை ஏற்றுக்கொண்டார் (மத் 13:12) சீரழிக்கப்பட்ட நாம் மனமாற வேண்டும். உண்மையான தூய வாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ள இயேசு அழைக்கின்றார். (எரே 7:3) உங்கள் வழிகளையும் செயல்களையும் சீர்ப்படுத்துங்கள்.

இளந்துடிப்பின் உணர்ச்சிக்கும், ஆசைக்கும், கவர்ச்சிக்கும் ஈர்க்கப்பட்ட வாலிப பருவ காதல் காமுகனின் கைகளுக்குள் சிக்குண்ட அக்கரங்கள் அகற்றப்பட வேண்டாமா? (உரோ 6:13) நீங்களே உங்கள் உறுப்புக்களைத் தீவினையின் கருவிகளாக பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள், பெற்றோரையும் அடித்து உதைக்கும் கைகால்கள் வேண்டுமா?

எமக்கு உரிமைச் சொத்தான பெறுமதிமிக்க நிலபுலன்கள் கண்டும் காணாமல் ஆக்கப்பட்டு, பிறர் உரிமைக் கோரியுள்ள சதுப்பு நிலங்களுக்காக போராட உதவிக் கரம் கேட்கும் கரங்களுக்கு நம் கைகள் நீட்டப்பட வேண்டுமா? (வி.ப 20:17) பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே.

தொழில் வளர்ச்சிக்கு ஆசை வார்த்தைக் காட்டி கொடிய வட்டிக்கு பணத்தைக் கொடுத்து எம்மை படுகுழிக்குள் வீழ்த்தப்பட்ட அத்தீய கைகள் மறக்கப்பட வேண்டாமா? (தி.பா 59:2) தீமை செய்வாரிடமிருந்து எனக்கு விடுதலை அளித்தருளும்.

மலிந்துபோன இன்னும் எத்தனை எத்தனையோ பாவங்கள் அன்றாட வாழ்வில் நடந்து கொண்டே தான் இருக்கின்றது. பாவங்கள் பல செய்து வாழ்வின் அழகான செயல்பாடுகளையும் இழந்து, வாழ்வின் பின்னரான மறுவாழ்வு நிலையையும் மறந்து விடுகின்றோம்.

நம் கைகளும் கால்களும் (மத் 18:6-8) பாவத்துக்கு ஏதுவான காரியங்களில் செயல்பட்டுள்ளது என்பதனை இக்காலங்களில் சிந்தித்துப் பார்ப்போம். அதற்காக துக்கப்படுவோம். கண்ணீர் சிந்துவோம்.

அதேவேளையில் பிறரது கைகள் கால்கள் நம் வாழ்வுக்கும் விசுவாசத்திற்கும் இடறலாக இருந்த சம்பவங்களையும் நினைத்து தியானித்து மன்னிப்பு பெற்றுக்கொள்வோம். (எரே 12:12-13) தளர்ந்து போன கைகளை திடப்படுத்துங்கள். தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள், நீங்கள் நேர்மையான பாதையில் நடந்து செல்லுங்கள் அப்போது தான் ஊனமாய்ப் போன கால்மூட்டு பிசகாமல் குணமடையும் (யோவா 1:3) அவரது கட்டளைகளை நாம் கடைப்பிடித்தால் நாம் அவரை அறிந்து கொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும். தூய கட்டளையை கடைப்பிடித்து கைகால்களை தெய்வீக காரியங்களுக்கு பயன்படுத்தி விண்ணக வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

**செல்வராணி ஜோர்ஜ், கொழும்பு 15.**



கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம்



கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம்.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த** உண்மையை வெளிப்படுத்துங்கள் என்று கோரி கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேராயரின் வேண்டுகோளுக்கிணங்க **கறுப்பு ஞாயிறாக** மௌன ஆர்ப்பாட்டம் அனுஷ்டிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பங்குகளின் சில நிகழ்வுகள்....



புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா ஆலயம்.



செக்கடித்தெரு புனித அன்னம்மாள், அன்னை வேளாங்கண்ணி ஆலயம்.



மாளிகாவத்தை புனித சமாதான இராக்கினி ஆலயம்.



தெமட்டக்கொட புனித அந்தோனியார் ஆலயம்.



முகத்துவாரம், புனித கர்ப்பிணி மாதா ஆலயம்.




மட்டக்குளி, புனித மரியாள் ஆலயம்.

# கொழும்பு உயர்மறைமாவட்ட அன்பிய ஆண்டையொட்டிய சிறப்பு செயற்றிட்டம்.

## (கொழும்பு உயர்மறைமாவட்ட அன்பிய இணைப்பாளர் அருட்பணி. பசில் விக்கிரம சிங்க அவர்களால் குருக்களுக்கான சிறப்பு ஒன்றுகூடலின் (2021.02.21) போது வழங்கப்பட்ட உரையில் இருந்து....)



1995ஆம் ஆண்டு ஆசிய ஆயர் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விசேட மகாநாட்டின் படி "அசிப்பா" (Asipa) என்ற குழுமம் புதிய முறையில் திருச்சபை ஆகுதல் என்பதை வலியுறுத்தும் ஏழு படிமுறைகளைக் கொண்ட நற்செய்திப் பகிர்வுப் பணியாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை ஆயர் பேரவையானது இவ்வாண்டை அசிப்பாவின் வெள்ளி விழாவாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தப்பின்னணியில் கொழும்பு உயர்மறைமாவட்டமானது இவ்வாண்டை அன்பிய ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இக்கட்டான அசாதாரண சூழ்நிலையில் எப்படி இந்த அன்பிய ஆண்டின் செயற்றிட்டத்தினை செயற்படுத்தலாம் என எண்ணலாம். இது உண்மையிலேயே ஒரு சவால் நிறைந்த செயற்பாடு. ஆனாலும் இறைவனின் ஆசீரோடு எமது இலக்கை அடையலாம் என எண்ணுகின்றேன்.

இதற்கென பேராயர் அவர்கள் ஒரு குழுவினை ஏற்படுத்தியுள்ளார். அவரோடு இணைந்து மேலும் மூன்று ஆயர்களும் 6 ஆயரின் சிறப்புப் பணிக் குருக்களும் (Episcopal Vicar), எல்லா விசுவாச ஊக்குவிப்பு இறை பணிக்குழு இயக்குனர்களும் 15 மறைக்கோட்ட ஒருங்கமைப்பாளர்களும், 15 மறைக்கோட்ட முதல்வர்களும் இதில் அடங்குவர். சற்று சிந்தித்துப் பாருங்கள் அருட்தந்தையர்களே எவ்வளவு சிறப்பான செயற்திறன் மிக்கோர் இக்குழுவில் இருக்கின்றனர் என்று. இந்த வளவாளர்களைக் கொண்டு நாம் இந்த புதுப்பித்தல் செயற்பாட்டை மிகத் துரிதமாக, இலகுவாகச் செயற்படுத்தலாம்.

இதற்கென ஏற்கனவே பல கூட்டங்கள் நடைபெற்று இந்தக் குழுவினர் பொறுப்புக்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்தை இலங்கை ஆயர் பேரவையானது தூய யோசேவ்வாசின் திருநாளாகிய தை மாதம் 16ஆம் திகதி பிரகடனப்படுத்தி ஆயத்தத்தை மேற்கொண்ட போதும் இதன் சிறப்புக் குழுவினர் தூய சூசையப்பரின் ஆண்டினையும் அன்பிய ஆண்டினையும் ஒன்றிணைத்து எதிர்வரும் பங்குனி மாதம் 19ஆம் திகதி தொடக்கம் சூசையப்பர் ஆண்டு முடிவடையும் 2022ஆம் ஆண்டு மார்கழி 8ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

கொழும்பு உயர்மறைமாவட்டமானது அன்பியக் குழுக்களையும், சிறு குழுக்களையும் ஒன்றிணைத்து அவர்களை ஊக்குவித்து இந்த செயற்பாட்டினை மேற்கொள்ள உள்ளது. இதற்கான முயற்சிகள் பல முன்னர் எடுக்கப்பட்டாலும் ஒழுங்கான மேற்பார்வை, வழிகாட்டல், பயிற்சிகள் இல்லாதபடியால் இடைநிறுத்தப்பட்டன. ஆனால் இம்முறை இவையனைத்தும் சரியாக சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு செயற்படுத்தப்பட இருக்கின்றன. எனவே இம்முறை இவையனைத்தும் அடிமட்டத்தில் இருந்து செயற்படப் போகின்றன.

### உயர்மறைமாவட்ட அன்பியக் குழுமத்தின் முன்னேற்ற அறிக்கை

1. 1981ஆம் ஆண்டு உயர்மறைமாவட்டத்தில் ஆரம்பம்.
2. 1995ஆம் ஆண்டில் அசிப்பா முறை அன்பியத்தினுள் புகுத்தப்பட்டது.
3. 2019ஆம் ஆண்டு விசுவாச ஊக்குவிப்பு இறை பணிக்குழு அன்பியக் குழுக்களின் தலைவர்களை பயிற்றுவித்து ஊக்குவிக்க பணிக்கப்பட்டனர்.

இதுபற்றி மேலதிகமாக கதைப்பதற்கு முன் சில முக்கிய கருத்துக்கள் பற்றி முடிவெடுக்க வேண்டும். அன்பியம் சிறு அன்பியக் குழுமம், அசிப்பா, பங்கு விசுவாச ஊக்குவிப்பு பணிக்குழு என்று குறிப்பிடும்போது சாதாரண மக்களுக்கு இது சில குழப்பங்களை ஏற்படுத்தும். இவை அனைத்தும் குறிப்பது ஒன்றே. இதற்கு நாம் முதலில் ஆரம்பத்திற்குச் செல்ல வேண்டும். அன்பியமானது ஆரம்பத்தில் உயர்மறைமாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு செயற்பட்டது. ஆசிய ஆயர் பேரவையின் தீர்மானத்திற்கு முன்னர் முன்னாள் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகையினால் இது தோற்றுவிக்கப்பட்டது. எனவே 40 ஆண்டுகளுக்கு முன்னர் இவை நடைபெற்றபடியால் இரண்டையும் இணைத்து அசிப்பாவின் வெள்ளிவிழா, அன்பியத்தின் ரூபி விழா ஆண்டாக இவ் ஆண்டை எடுத்து யூபிலி விழாவாக கொண்டாடவுள்ளோம்.

எனவே இந்த யூபிலி ஆண்டிலே சிறப்பாக ஊக்குவிப்பாளர்களை, தலைவர்களை, பங்குமட்டத்திலே தயாரித்து, பயிற்றுவித்து, அர்ப்பணிப்போடு பணியாற்ற வழிமுறைகளை வழங்கி ஊக்குவித்தல் தலையாய கடமையாகவுள்ளது. எனவே பங்கு ரீதியாக, மறைகோட்ட ரீதியாக, மறைமாவட்ட ரீதியாக அடிமட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை உள்ள அனைவரையும் தயாரித்து 4 மறைக்கோட்டங்களிலும், அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி ஆயத்தப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான கால அட்டவணை பங்கு மட்டமாகவும், மறைக்கோட்ட மட்டமாகவும், மறைமாவட்ட மட்டத்திலும் தயாரிக்கப்படுகின்றது. அவற்றுள் சிறப்பான பயிற்சிப் பட்டறைகள், யாத்திரைகள், ஞானவொடுக்கம்,

**ஆக்கம். அருட்சகோ.**
**R. ஜோசப் ஜெயகாந்தன்.**

ஒன்றுகூடல்கள் என்பனவும் அடங்கும். இவையனைத்தும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை இடம் கொடுக்கும் பட்சத்தில் மட்டுமே முழுமையாக இடம்பெறும். இவை தவிர சில உபகரணங்களையும் சுவரொட்டிகளையும் தயாரிப்பதற்கென தேசிய ஒருங்கமைப்பு ஆணைக்குழு ஆவண செய்துள்ளன.

- இதற்கென ஒரு கருத்துருவாக்க கீதம் (Anthem) அருட்பணி. சிசில் ஜோய் அவர்களால் தயாரிக்கப்படுகின்றது.
- திருவழிபாட்டுக் குழுவின் தலைவர் அருட்பணி. இந்திக ஜோசப் அவர்களால் செப அட்டை, சுவரொட்டி என்பன தயாரிக்கப்படுகின்றது.
- அருட்பணி. யூட் கிறிஸ்சாந்துஸ் பெர்னாண்டோ அவர்களால் இதுபற்றிய இறுவட்டு ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இவையனைத்தும் அனைத்து பங்குகளுக்கும், பாடசாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் யூபிலி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் திருவழிபாட்டு நிலையத்தினால் அனுப்பி வைக்கப்படும்.

15 மறைக்கோட்டங்களைச் சார்ந்த மறைக்கோட்ட முதல்வர்கள் இந்த செயற்திட்டம் பற்றிய மேற்பார்வை செய்து பதியவிட்டு அறிக்கை ஒன்றைத் தயாரிப்பர்.

மறைமாவட்ட குழுவினர் இதைச் செயற்படுத்துவதற்கென சில சிறிய குழுக்களை யூபிலி காலத்தினுள் அமைப்பர். இந்த ஒன்றுகூடலின் பின் இது பற்றிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறும்.

### உத்தேச திட்டங்கள்.

1. அனுபவம் உள்ள அருட்பணியாளர்களின் உதவியை நாடி ஊக்குவிப்பாளர்களை பயிற்றுவித்தல்.
2. எல்லா நற்செய்திப் பணியாளர்களின் உதவியை நாடுதல். அதாவது இளைஞர் ஒன்றியங்கள், குடும்பப் பணியகங்கள், சிறுவர் ஒன்றியங்கள், மறையாசிரியர்கள், திருப்பாலத்துவ சபையினர், செத்சரன நிறுவனத்தின் பணியை பெறுநர்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் இச்செயற்பாட்டை முன்னெடுத்தல்.
3. செபங்களும் செயற்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாக எல்லாச் செயற்பாடுகளும் அமைய வேண்டும்.
4. இதற்கென சிறப்புக் குடிசைத் திருப்பலிகள், ஞாயிறு நற்செய்திப் பகிர்வு, செபக்கூட்டங்கள், கட்டம் கட்டமாக செபமாலைகள், திருமணத் தியானங்கள் என்பனவற்றை ஒழுங்கமைத்தல்.
5. "அசிப்பா" குழுமத்தின் 7 படிமுறைகளைப் பயன்படுத்தி பங்கினைப் புதுப்பித்தல்.
6. கவனிப்பார் அற்றுள்ள பகுதிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல். போதைவஸ்து பாவனையாளர்கள், அடிப்படைவாதக் குழுக்கள், கலப்புத் திருமணம் செய்தோர், வளர்ந்தோர் ஞானஸ்நானம் பெறுவோர், கைம்பெண்கள், ஆதரவற்றவர்கள் போன்றோர்.

### முக்கியமான ஆலோசனைகள்.

1. பங்கு தரிசரிப்பும் சிறு அன்பியக் குழுக்களைப் புதுப்பித்தலும் மிக முக்கியமானது.
2. தெரிவுசெய்யும் தலைவர்கள் அர்ப்பணிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும், குழப்பம் ஏற்படுத்துபவர்களாக அல்ல.
3. காலம் தாழ்த்தாது தெரிவு செய்யப்பட்ட தலைவர்களுக்கான பயிற்சியை விசுவாச ஊக்குவிப்பு மறைப்பணி குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.
4. மாதாந்த கூட்டங்களை பங்கு மட்டத்தில் நடாத்தி மீளாய்வு செய்ய வேண்டும்.
5. அருட்பணியாளர்கள் பங்கில் இருந்து மாற்றம் பெறுவர். எனவே அர்ப்பணிப்புள்ள பொதுநிலையினரிடம் இப்பணியை ஒப்படைக்க வேண்டும்.
6. இக்காலத்தைக் கருத்திற் கொண்டு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி சிறிய குழுக்களாகச் செயற்பட வேண்டும்.
7. உயர்மறைமாவட்ட வெளியீடான "கொங்னோனியா", ஞானஒளி, மெசஞ்சர், ஞானத்தபிரதீபய போன்றவற்றுக்கு இதன் முன்னேற்றம் பற்றி எழுதவேண்டும்.
8. அன்பியத்திற்கென பேராயர் இல்லத்தில் அலுவலகம் ஒன்று வெகுவிரைவில் திறக்கப்பட இருக்கின்றது. அதிலே மும்மொழிகளிலும் செயற்பாடுகள் நடைபெற ஆவண செய்யப்படும்.
9. எதைச் செய்வதாக இருந்தாலும் அதற்கான வளவாளர்களும், பயிற்சியும் ஒழுங்கமைப்புக் குழுவால் மேற்கொள்ளப்படும். ஏனையவை பங்கு ரீதியாகவோ, கோட்ட ரீதியாகவோ நடைபெற வேண்டும்.



# சிறுவர் ஒளி



## ஒப்புரவு... அருட்சாதனங்கள்

## மறைக் கல்வி அறிவோம்



**19. ஒப்புரவு அல்லது பாவசங்கீர்த்தனம் அருட்சாதனத்தை ஆண்டவர் இயேசு எப்போது நிறுவினார்?**

- கிறிஸ்து மரணத்தினின்று உயிர்த்த தினத்தில் நிறுவினார்.

**20. அவர் அதனை எவ்வாறு நிறுவினார்?**

- அவர்தம் சீடர்கள் மேல் ஊதி, ‘தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை உங்களுக்கு மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னியாது இருப்பீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படா என்றுரைத்த போது இவ்வருட்சாதனத்தை நிறுவினார்..

**21. ஒப்புரவு அருட்சாதனத்தின் வழியாக கிறிஸ்து என்ன செய்கிறார்?**

- திருமுழுக்குப் பெற்ற பின் சாவான பாவத்தின் வீழ்ந்திருக்கும் அனைவருக்கும் ஒப்புரவு அவசியமாகிருக்கிறது.

**22. ஒப்புரவு யாருக்கு அவசியமாயிருக்கிறது?**

- திருமுழுக்கு பெற்றபின் சாவான பாவத்தில் வீழ்ந்திருக்கும் அனைவருக்கும் ஒப்புரவு அவசியமாயிருக்கிறது.

**23. நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்ய தேவைப்படும் காரணங்கள் யாவை?**

- காரணங்கள் 05 உள்ளன. அவையாவன;

1. தம் பாவத்தை நினைவுக் கூர்தல்,
2. அதற்காக மனம் வருந்துதல்
3. மீண்டும் பாவம் செய்யேன் என்று உறுதி கொள்ளுதல்
4. குருவிடம் எல்லா பாவங்களையும் அறிக்கையிடல்
5. குரு கூறும் பரிகாரத்தை நிறைவேற்றல்

## வேதாகமம் வாசிப்போம்




11. லூக்கா மீட்பு வரலாற்றை எத்தனைக் கட்டங்களாகப் பிரிக்கிறார்?
12. இந்நூலில் உலக மீட்பின் திட்டத்தின் மையமாக திகழ்வது எது?
13. இந்நூலின் எக்கருத்து முதன்மை செய்தியாக விளங்குகிறது?
14. சீடத்துவத்தின் சிறப்புத் தகுதிகள் யாவை?
15. எலிசபெத் எந்த வழி வந்தவர்?
16. யூதேய நாட்டில் அரசனாக இருந்தது யார்?
17. செக்கரியா எந்த வகுப்பைச் சேர்ந்தவர்?
18. செக்கரியாவின் மனைவி பெயர் என்ன?
19. செக்கரியாவும், எலிசபெத்தும் யாருடைய பார்வையில் நேர்மையானவர்களாக விளங்கினர்?
20. செக்கரியா கடவுளின் திருமுன் ஆற்றிய பணி என்ன?

15ம் பக்கம் விடைகள்

**ஞான ஒளி**
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
கொழும்பு 08.
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள ஞான ஒளி முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.

## வேதாகமத்தில் காணும் அருள் மொழிகள்

### நீதிமொழிகள்

A வலிமை உடையவரைவிட பொறுமை உடையவரே மேல் 16:26

A நாவை காத்துக் கொள்கிறவன் தன் உயிரையேக் காத்துக் கொள்கிறான் 21:23

A ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவன் கடவுளுக்கு கடன் கொடுக்கிறான்* 19:17

A திரண்ட செல்வத்தைவிட நற்பெயரை தெரிந்து கொள்வதே மேல் சபை. 71

A குழந்தாய், நீ விரும்பினால் நற்பயிற்சிபெற முடியும்ஊ உன் கருத்தைச் செலுத்தினால் திறமையுடன் திகழ முடியும். சீராக் [6:32]

## நம் செபம் உடனே கேட்கப்படும்!

**அன்புக் குழந்தைகளே!**




ஒரு கிராமத்தில் ஒரு விதவைப் பெண் வசித்து வந்தார். அவள் தனது ஒரே மகனைச் செல்லம்கொடுத்து வளர்க்கவில்லை. தெய்வ பக்தியில் சிறந்தவனாகவே வளர்த்தாள். தாயும் மகனும் சேர்ந்து வேதாகமம் வாசிக்கத் தவறுவது கிடையாது. அந்த மகனின் பெயர் மோசே. தன் மகன் மேசேயைப் போல் வளர வேண்டும் என ஆசைப்பட்டாள். தாய் எண் ணத்தின்படியே அவனும் வளர்ந்து வந்தான். அவன் பத்தாவது வகுப்புப் படித்து முடிந்ததும் அருகில் இருந்த ஒரு சிறிய வங்கியில் கடன்களை வசூலிக்கும் பகுதி நேர ஊழியனாக வேலைக்கு அமர்ந்தான். தினமும் பக்கத்து ஊர்களில் உள்ளவர்களிடம் கடன்களை வசூலித்து வங்கியில் கட்டி வந்தான். ஒரு நாள் வசூல் முடிந்து வரும்போது மிகவும் இருள் சூழ்ந்திருந்த மழையும் பெய்து கொண்டிருந்தது. அந்த கிராமத்திலுள்ள ஒரு போக்கிரி இவன் சேகரித்துக் கொண்டுவரும் பணத்தை எப்படியும் கொள்ளை அடிக்க வேண்டும், அவன் வரும் வழியிலுள்ள புதருக்குள்ளே காத்திருந்தான். மோசே இப்புதரின் பக்கம் வந்தபோது மோசேக்கு ஒரு புதிய துணிவு தென்பட்டது. அப்போது மோசே சவுல் என்பவர் பவுலான சம்பவத்தை நினைத்து முழங்கால்படியிட்டு செபிக்கத் தொடங்கினான். புதரில் பதுங்கியிருந்த போக்கிரி உடனே வெளியே வந்து மேசேயிடம் மன்னிப்பு கேட்டான். நான் இன்று உனது பணத்தை கொள்ளையடிக்க திட்டமிட்டிருந்தேன். ஆனால் நீ என்னை கண்டு முழங்கால்படியிட்டு செபிக்கும் போது நான் கிறிஸ்துவைப் பார்த்தேன். மனம்மாறி விட்டேன் என கண்களில் கண்ணீர் மல்க கூறினான்.

**நமது முன்மாதிரியான வாழ்க்கை கடின மனது உடையவர்களையும் மனம் மாற்றும் வல்லமை படைத்தது!**

S. அஷானி இமேஷிகா
தரம் 06 புனித அன்னம்மாள் தேவாலயம் கஹவத்தை



## ஐந்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



## நிறம் தீட்டுக



மாணவர் ஒளி

# ஆக்கபூர்வமான சிந்தனையை உங்களில் வளர்த்தெடுங்கள்.

அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.

எந்த முயற்சிக்கும் நம்பிக்கை முக்கியமானது நம்பிக்கையிழந்து போனால் வாழ்வுக்கு அர்த்தம் இல்லாமல் போவது மட்டுமல்ல, வாழ்வேண்டுமென்ற ஆர்வமும் இல்லாது போய்விடும்.

யுத்தக் கைதியாக இரண்டு வருடங்கள் இருந்த என் நண்பர் ஒருவர் தன்னோடு சிறையிலிருந்த பலர் வாழவேண்டுமென்ற ஆர்வம் இல்லாததால் சிறைச்சாலையிலேயே இறந்து விட்டனர் என்று கூறினார். அங்குள்ள நிலைமை மோசம்தான். ஆனால் உடல் ரீதியாக அவர்களுக்கு எந்த நோயுமில்லை. ஆனால் விடுதலை செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையை இழந்து விட்டனர். நம்பிக்கையிருந்தால் எதையும் தாங்கிக் கொள்ளலாம்.

நம்பிக்கை ஒரு தெய்வீகக் கொடை. "நம்பிக்கை மனித உள்ளத்தில் நித்தியத்தை உதிக்கச் செய்கிறது" என்று அலெக்சாண்டர் போப் என்னும் கவிஞர் எழுதினார். முழுமையான வாழ்வுக்கான உந்து சக்தி இது. உடல் நலம், தனிநபரின் சாதனை மற்றும் மனித வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்திலும் நம்பிக்கையின் விளைவை அளவிட முடியாது.

நோயாளிகளுக்கு இருக்க வேண்டிய மனப்பான்மையின் முக்கியத்துவம் பற்றி அண்மைக் காலத்தில் மருத்துவம் அதிகம் கண்டு பிடித்துள்ளது. நம்பிக்கை நிறைந்தவர்களில் மருந்து இலகுவாக வேலை செய்யும் என்பதை உளரீதியாக விளக்குவது எளிது. மனித உடல் வெறும் உடலமைப்பு மட்டுமல்ல, உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையே உள்ள தொடர்பு மிக நெருக்கமானது. ஒவ்வொரு எண்ணமும் உணர்வும் உடல் உறுப்புக்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### புதிய உயிர்த்துடிப்பு

எந்த நோயாளிக்கும் மருத்துவர்கள் தன்னம்பிக்கை ஊட்ட முயற்சிக்கின்றனர். அதேபோன்று தான் எத்துறையில் உள்ளவர்களுக்கும் தன்னம்பிக்கை அவசியம். தன்னம்பிக்கை இல்லையென்றால் எந்த முயற்சியிலும் வெற்றி காணமுடியாது.

மறுபக்கத்தில் நேர்மறையாகச் சிந்திப்பவர்க்கு அவர் எதிர்நோக்கும் தீங்குகள் பற்றியும் தோல்விகளுக்கு எதிராக பாதுகாப்பு உண்டென்றும் கூறத் தேவையில்லை. அவர் தன்னால் முடியும் என்றும், வெற்றி பெறுவேன் என்றும் நம்புவார். அதுவே வெற்றியைக் கொண்டுவரும். தோல்வியென்று நினைத்தால் தோல்வி தான் வரும். தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை



நினைக்கலாமா? வெற்றியென்று நம்பினால் வெற்றி கிடைக்கும். மனம் போன்று வாழ்வு.

### இப்படி நடக்குமா?

வில்லியம் ஜேம்ஸ் என்பவர் நடைமுறைக் கோட்பாடு என்னும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டு பிடித்தார். அதாவது எந்தவொரு கொள்கையோ, கோட்பாடோ, எண்ணமோ நடைமுறைப்படுத்தப்பட்டால் அது நடக்குமா என்பது பற்றியதே அது.

எந்தவொரு சிக்கல், பிரச்சினை, சூழ்நிலையில் மகிழ்ச்சியின்றி அவ நம்பிக்கையோடு தீர்க்க முயன்றால் வெற்றி கிட்டாது. அது மனஉடைவிலும், தோல்வியிலும் தான் முடியும். நேர்மறை மனப்பாங்கு வெற்றியைக் கொண்டு வரும்.

நேர்மறை மனப்பாங்கை வளர்ப்பது எப்படி? சிலருடைய மனப்போக்கிற்கு இது கூடிய கடினமாயிருக்கலாம். சிலர் இயல்பாகவே மகிழ்வானவர்கள். வேறு சிலர் சோகமும் அங்கலாய்ப்பும் நிறைந்தவர்கள். உயிர்த்துடிப்பின்மையும் இதற்கு ஒரு காரணம். உண்மையென்னவென்றால் ஒவ்வொருவரிலும் நேர்மறை, எதிர்மறை மனப்பாங்குகள் இரண்டும் உண்டு. எப்படி அவற்றைச் சமநிலைக்குக் கொண்டு வருகின்றோம் என்பதே முக்கியம். முயன்றால் முடியும்.

### உங்கள் பேச்சோடு ஆரம்பியுங்கள்.

நாம் வாழும் காலம் அறிவுத் தெளிவுடைய காலம். எதிலும் குற்றம் காண்பது இயல்பாகிவிட்டது. இதை எப்போதும் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஒன்றைப் பற்றி நன்றாகச் சொல்லவோ ஏற்றுக்கொள்ளவோ எதுவுமில்லையென்றால் பேசாமலிருங்கள். ஊக்கமூட்டக் கூடியது ஏதுமிருந்தால் தவறாமல் சொல்லுங்கள். அது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவியாயிருக்கும் பேச்சு பிரதிபலிக்கும் தன்மையுடையது. நாம் எப்படிப் பேசுகின்றோமோ அவ்வாறு மாறுகிறோம். அமைதியாக, தெளிவாக, மன அழுத்தமாக, துயரமாக, ஆனந்தமாக எப்படிப் பேசிக் கொண்டிருக்கிறோமோ அப்படியே மாறுவோம்.

### பிரச்சினைகளிலிருந்து ஓட வேண்டாம்.

மனம் உண்டானால் இடமுண்டு. ஒன்றை உள்ளபடியே அணுகுங்கள். அந்நிகழ்வின் நன்மை தீமைகளை ஒரு தாளில் எழுதுங்கள். எழுதிய பின் பக்கச்சார்பின்றிப் படியுங்கள். வேறு என்ன அணுகுமுறை இருக்கலாம் என்று கண்டுபிடிக்க முயலுங்கள். ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முதல்படி அதைச் சரியான கண்ணோட்டத்தில் பார்ப்பது. இலேசான ஆனால் உறுதியான உள்ளத்தோடு தீர்க்க முயற்சியுங்கள்.

### உங்கள் தனிப்பட்ட உறவுகளிலும் நேர்மறை மனப்பாங்கைப் பயன்படுத்துங்கள்.

யாராவது உங்களுக்கு எரிச்சலூட்டினால், முதலில் அவரோடு சினந்து பின்பு அவரைப் பகைக்குமளவுக்கு நீங்கள் மாறலாம். இது உங்களுக்குக் கூடாது. சற்று தளர்வு நிலையோடும் நிதானத்தோடும் அந்நிகழ்வின் மறுபக்கத்தையும் பாருங்கள். அந்த நபரின் நல்ல பண்புகளை எண்ணிப்பாருங்கள். அவை உங்கள் மனதை நிரப்பவிடுங்கள். இது உங்கள் மடமைத்தனத்தை நீக்கி மன்னிக்கச் செய்வது மாத்திரமல்ல, அவரை உங்கள் நண்பனாகவும் கருதச் செய்யும்.

### தவிர்க்க முடியாததை ஏற்றுக்கொள்ளுங்கள்.

கண் பார்வையின்மை, உடல் உறுப்பை இழப்பது, தீராத வியாதி உங்களைப் பீடித்தால் அவற்றிற்கு வேறு வழியில்லை. வாழ்வு முழுவதும் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இப்படியான சந்தர்ப்பங்களிலும் நம்பிக்கையோடும் நேர்மறையாயும் சிந்திப்பவரில் வித்தியாசமிருக்கும். ஒரு நிகழ்வை எப்படியான மனநிலையோடு எடுக்கிறோம் என்பதே முக்கியம்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# தன்னம்பிக்கை வளர செய்யக்கூடிய சில விடயங்கள்

அருட்சகோ. மார்க்கிரேட்

மனதையும் உடலையும் பாதுகாப்பாக வைத்திருப்பது பெருமளவில் நமது வாழ்க்கை முறையைச் சாந்தது. அதாவது நமது உணவு, துக்கம், உடல் சார்ந்த நடவடிக்கைகள். அன்றாடச் செயல்பாடுகள், பழக்க வழக்கங்கள் எனப் பல அம்சங்களை தேவையான மாற்றங்களைச் செய்து கொண்டால் மனமும் உடலும் பாதுகாப்பாக அமையும்

1. தண்ணீர் நிறை குடியுங்கள்
2. காலை உணவு ஒரு அரசன் அரசி போலவும், மதிய உணவு ஒரு இளவரசன் இளவரசி போலவும், இரவு உணவை யாசகம் செய்பவனைப் போலவும் உண்ண வேண்டும்.
3. இயற்கை உணவை பழங்களை அதிகமாக எடுத்துக் கொண்டு பதப்படுத்தப்பட்ட உணவை தவிர்த்துவிடுங்கள்.
4. உடற்பயிற்சி மற்றும் பிரார்த்தனைக்கு நேரம் ஒதுக்குங்கள்.
5. தினமும் முடிந்த அளவு விளையாடுங்கள்
6. நிறைய புத்தகங்கள் படியுங்கள்.
7. ஒரு நாளைக்கு 10 நிமிடம் தனிமையில் அமைதியாக இருங்கள்.
8. குறைந்தது 7 மணி நேரம் தூங்குங்கள்.
9. குறைந்தது 10 நிமிடம் முதல் 30 நிமிடங்கள் வரை நடைப் பயிற்சி மேற்கொள்ளுங்கள்.
10. உங்களை ஒருபொழுதும் மற்றவருடன் ஒப்பிடாதீர்கள். அவர்கள் பயணிக்கும் மேற்கொண்டிருக்கும் பாதை வேறு, உங்கள் பாதை வேறு.
11. எதிர்மறையான எண்ணங்களை எப்பொழுதும் மனதில் நினைக்காதீர்கள்
12. உங்களால் முடிந்த அளவு வேலை செய்யுங்கள். அளவுக்கு மீறி எதையும் செய்யாதீர்கள்.
13. மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவதில் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள்
14. நீங்கள் விழித்திருக்கும் பொழுது எதிர்காலத்தைப் பற்றிய நிறைய கனவு காணுங்கள். அது உங்கள் மனதைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.
15. அடுத்தவரைப் பார்த்துப் பொறாமை கொள்வது நேர விரையம். உங்களுக்கு தேவையானது உங்களிடம் உள்ளது.
16. கடந்த காலத்தை மறக்க முயற்சி செய்யுங்கள். கடந்த காலம் உங்கள் நிகழ்காலத்தைச் சிதைத்துவிடும்.
17. வாழும் இந்த குறுகிய காலத்தில் யாரையும் வெறுக்காதீர்கள்.
18. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.
19. வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். நீங்கள் கற்றுக்கொள்ள வந்திருக்கிறீர்கள். சிக்கல்களும். பிரச்சினைகளும் இங்கு பாடங்கள்.
20. முடியாது என்று சொல்லவேண்டிய இடங்களில் தயவுசெய்து முடியாது என்று சொல்லுங்கள். இது பல பிரச்சினைகளை ஆரம்பத்திலே தீர்த்துவிடும்.
21. வெளிநாட்டிலோ வெளியூரிலோ இருந்தால் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு நண்பர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் அடிக்கடி தொலைபேசியிலோ, கடிதம் மூலமாகவோ தொடர்புகொண்டிருங்கள்.
22. மன்னிக்கப் பழகுங்கள்
23. 70 வயதுக்கு மேலிப்பவர்களையும், 6 வயதுக்கு கீழிருப்பவர்களையும் கவனிக்க நேரம் ஒதுக்குங்கள்.
24. அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப்பற்றி ஒருபொழுதும் கவலை கொள்ளாதீர்கள்.
25. உங்கள் நண்பர்களை மதிக்க பழகுங்கள்.
26. உங்கள மனதிற்கு எது சரியென்றுபடுகிறதோ அதை உடனே செய்யுங்கள்.
27. ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள்.
28. உங்கள் ஆழ்மனதில் இருப்பது சந்தோஷம் தான். அதை தேடி அனுபவித்துக் கொண்டே இருங்கள்.
29. உங்களுக்கு எது சந்தோஷத்தை கொடுக்காதோ, எது அழகை கொடுக்காதோ நிம்மதியை கொடுக்காதோ அதை நீக்கிவிடுங்கள்.
30. எந்தச் சூழ்நிலையும் ஒரு நாள் கண்டிப்பாக மாறும் என்பதில் நம்பிக்கை வையுங்கள்



# புனித வாரம்



### குருத்து ஞாயிறு

கண்ணீர் வராத கண்கள் இல்லை. புலம்பாத நாவுகள் இல்லை. புண்படாத மனங்களில்லை, வாழுகின்ற ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் துன்பத்தின் பிடியில் சிக்கி தவிக்கின்றார்கள். துன்பத்தை வெறுக்கிறோம். ஆனால் துன்பத்தை தாங்கிக் கொண்டவருக்கு ஓசான்னா என்று இன்னிசை கீதம் முழங்குகின்றோம். அவரே மெசியா என்று பறைசாற்றுகின்றோம். முரண்பாடான விடயம். ஆண்டாண்டுகளாக அந்நிய நாட்டில் அரசர்களுக்கு அடிமைபட்டு கிடந்த மக்கள், தங்களை பாவத்திலிருந்தும், அடிமை வாழ்விலிருந்தும் மீட்கப் போகின்ற ஆண்டவரை பார்த்து, ஒலிவக்கிளைகளுடன் தாவீதின் மகனே, ஆண்டவரே! எங்களை மீட்டருளும் (ஓசான்னா) ஆண்டவரே, வெற்றி தாரும்! என்று ஆரவாரம் முழங்க, வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேம் நுழைந்ததை நாம் இன்று நினைவு கூறுகின்றோம்.

நாட்டின் அமைதியான காலங்களில் அரசர்கள் மக்களை சந்திக்க நகருக்கு வரும்போது கழுதையில் வந்தார்கள். மேலும் வெற்றிவாகையோடு திரும்புகின்ற அரசர்களை வரவேற்பதும் எபிரேய மக்களின் வழக்கமாகும். இயேசுவும் கோவேறு கழுதையில் பெத்தானியாவிலிருந்து எருசலேம் நகருக்கு வந்ததையும் நாம் நினைவு கூறுகின்றோம்.

ஒத்தமை நற்செய்திகள், மக்கள் ஓசான்னா என்று பாடி இயேசுவுடன் பயணித்து அவரை அரசராக வரவேற்றதை யோவான் நற்செய்தி, ஏற்கனவே பாஸ்காவிற்காக எருசலேம் வந்திருந்தவர்கள், நுழைவாயில் அருகில் கூடி நின்று இயேசுவை ஆர்ப்பரித்து ஏற்றுக்கொண்டதையும் கூறுகின்றது. சுமார் 2ம் நூற்றாண்டிலேயே ஆண்டவரின் எருசலேம் நுழைவு பற்றிய அனைத்து விடயமும் செயல்படுத்தும் முயற்சி இருந்தது. கி.பி 5ம் நூற்றாண்டில் எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அனைவரும் நண்பகல் வேளையில் ஒலிவ மலையில் கூடி செபித்த பின்பு, மாலையில் ஒலிவக் கிளைகளையும் வேறு சில மரங்களையும் கையில் ஏந்தி, பவனியாக எருசலேம் ஆலயத்திற்கு சென்றார்கள். இதுவே கி.பி 8ம் நூற்றாண்டில் இருந்து குருத்து ஞாயிறாக கொண்டாடப்பட்டது.

அனைத்து பாடுகளையும் ஏற்றுக்கொண்ட இறைவன் நாமும் எமது துன்பங்களையும் பிறரின் துன்பங்களையும் ஏற்க வேண்டும் என்று விரும்புகிறார். இவ்விருப்பம் இருந்தால் மட்டும் பாடுகளுக்கு ஓசான்னா பாடுவது பொருத்தமாக இருக்கும்.

இயேசுவின், எருசலேம் பயணத்திற்கு நாற்பது நாட்களாக செபத்திலும், தவத்திலும், தானத்திலும் நம்பிக்கையோடும் ஆண்டவர் இயேசுவின் பாடுகளை ஆழமாக தியானித்தோம். பல்வேறு கவலைகளோடும் கண்ணீரோடும், துன்ப துயரங்களோடும் கூடி நிற்கும் நாம், நம்மை மீட்க, இயேசுவை வரவேற்ற, இயேசுவை பார்த்து கதறிய இஸ்ரயேலரின் மனநிலையோடு குருத்தோலைகளை கைகளிலேந்தி பக்தியுடன் இப்பவனியில் பங்கேற்போம்.

அனைத்து பாடுகளையும் ஏற்றுக்கொண்ட இறைவன் நாமும் எமது துன்பங்களையும் பிறரின் துன்பங்களையும் ஏற்க வேண்டும் என்று விரும்புகிறார். இவ்விருப்பம் இருந்தால் மட்டுமே பாடுகளுக்கு ஓசான்னா பாடுவது பொருத்தமாக இருக்கும்.

இயேசுவின் எருசலேம் பயணத்திற்கு நாற்பது நாட்களாக செபத்திலும், தவத்திலும் தானத்திலும் நம்பிக்கையோடிருத்தல்.

ஆண்டவர் இயேசுவின் பாடுகளை ஆழமாக தியானித்தோம். பல்வேறு கவலைகளோடும், கண்ணீரோடும் துன்பதுயரங்களோடும் கூடி நிற்கும் நாம், நம்மை மீட்க இயேசுவை வரவேற்ற, இயேசுவை பார்த்து கதறிய இஸ்ரயேலரின் மனநிலையோடு, குருத்தோலைகளைக் கைகளிலேந்தி பக்தியுடன் இப்பவனியில் பங்கேற்போம்.

### புனித வியாழன்

உறவும் உணவும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. உணவு வேண்டாமென்றால் உறவு வேண்டாம் என்று அர்த்தம். செத்தாலும் உன் வீட்டில் கையை நனைக்க மாட்டேன்.

ஆண்டுதோறும் ஒவ்வொரு யூத குடும்பமும், தங்களுடைய 400 ஆண்டுகள் அடிமையை அடுத்து, மோயீசனின் வழிநடத்தலினால் பெற்றுக்கொண்ட விடுதலையை நினைவு கூர்ந்து நன்றி கூறும்படியாக, பாஸ்கா விழாவை கொண்டாட வேண்டும் என்று கட்டளை இடப்பட்டது. இதை நாம் முதலாம் வாசகத்தில் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

இயேசு சிலுவை சாவை நோக்கி செல்லும் முன், தாம் அன்பு கூர்ந்த நண்பர்களை இறுதிவரை அன்புகூர்ந்து அவர்களோடு பந்தி அமர்ந்து பாஸ்கா விழாவை நினைவாக கொண்டாடுமாறு கட்டளையிட்டார். அன்றுமுதல் திருப்பலியும் குருத்துவமும் உதயமானது.

> *உடல் உடைத்தார், பிய்த்தார், இரத்தம் சிந்தினார், பகிர்ந்தளித்தார். பகிர்தலுக்கு இலக்கணம் வகுத்தவர் இயேசு. தன்னல மனங்கள் பகிரும் மனம் பெற வேண்டும். ஏனெனில் நற்கருணை ஒற்றுமையின் சின்னம். பகிர்வின் சின்னம்.*

இன்றைய வழிபாடானது இறைவார்த்தை வழிபாடு, பாதம் கழுவும் சடங்கு, நற்கருணை பவனி மூன்று பிரிவுகளை கொண்டது.

### பாதம் கழுவுதல்

பாலஸ்தீன நாட்டிலே பெரும்பாலான நாட்களில் சாலைகளில் சேறும் சகதியும் உண்டு. வீட்டுக்குள் யாராவது வரும்போது ஒரு அடிமை அவர்களின் கால்களை கழுவுவது வழக்கம். கடவுளும் மனிதனுமாகிய இயேசு தம் சீடர்களின் பாதங்களை கழுவுவதன் மூலம் கருணையும், பணிவும், தாழ்ச்சியுமே ஒரு உண்மையான தலைவரின் பணி என்பதை உணர்த்தி, "பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவே வந்தேன் என்றும் நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்" என்று அன்பு கட்டளையை கற்றுக் கொடுத்தார்.

### நற்கருணை இடமாற்றம்

திவ்ய நற்கருணை இயேசுவின் அன்பு பிரசன்னத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றது. சுப விடயங்களை கூட துணை இன்றி நிறைவேற்றலாம். ஆனால் துயர விடயங்களை பகிர்ந்துகொள்ள துணை தேவைப்படுகிறது. இயேசு தான் அனுபவிக்கப்போகும் துன்பமான பாடுகளையும் மரணத்தையும் அறிந்து, தன் தந்தையிடம் வேண்டுதல் செய்ய தன் சீடர்களுடன் ஜெஸ்தமனி தோட்டத்திற்கு செல்கின்றார். அவ்வாறு செல்லும் பயணத்தையே நற்கருணை பவனி வெளிப்படுத்துகின்றது. சீடர்கள் இயேசுவோடு செபிக்காமல், அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க வலுவில்லையா என்கிறார். இந்த நேரத்தில் எம்முடைய துயரங்களை ஏற்றுக்கொண்டு இயேசு அன்று தன் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றியதுபோல் நாமும் யாதிலும் இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டுவோம்.

### பெரிய வெள்ளி

இறப்பு எல்லோருக்கும் வரும். ஆதாமுக்கும் வந்தது. ஆபிரகாமுக்கும் வந்தது. மோசேக்கும் வந்தது. காந்திக்கும் வந்தது. நமது முன்னோருக்கும் இறப்பு வந்தது. நாமும் இறப்பை எதிர்நோக்கி இருக்கின்றோம்.

ஒரு தாயானவள் ஒவ்வொரு பிரசவ வேதனையிலும் இறந்து தன் குழந்தைக்காக மீண்டும் உயிர்பெற்று வருவதைபோல இயேசு கிறிஸ்துவும் இவ்வுலக மக்களுக்காக இரத்தம் சிந்தி மரித்து, எங்களுக்கு வாழ்வளித்தார்.

இயேசுவின் இரத்தத்தில் வாழ்வு பெற்ற நாம் நமது இரத்தத்தை பிறருக்காக கொடுக்கவும் அழைக்கப்படுகின்றோம். 'ஒருவரின் குற்றம் எல்லா மனிதருக்கும் தண்டனை தீர்ப்பாய் அமைந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லாம் மனிதருக்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் அமைந்தது. (உரோம 5:18) நாம் பாவத்திற்குள் மரித்து ஆண்டவரில் உயிர்க்க வேண்டும் என்று தான் அவர் விரும்புகிறார். எனவேதான் மனமுவந்து சிலுவைச் சாவை அவர் ஏற்றுக்கொள்கிறார்.

அன்று பாலைவனத்திலே வெண்கல பாம்பு உயர்த்தப்பட்ட போது, அதை உற்று பார்த்தவர்கள், உயிர் பிழைத்தார்கள். இன்று விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே சிலுவையில் பாவப்பரிகார செம்மறியாக உயர்த்தப்பட்டிருக்கின்ற இயேசுவை உற்று பார்க்க இந்த உலகம் அனைத்தும் கூடி இருக்கிறது. இன்று தான் ஒரு தனி மனிதனின் சாவு மனித குல மீட்பாக அமைந்தது. தண்டனையின் கருவியாய் இருந்த சிலுவை, நம் விடுதலையின் சின் னமாக வெற்றியின் சின்னமாக மாறியது. இங்கு நடை பெறும் வழிபாடுகளில் வெறும் பார்வையாளர்களாக இல்லாமல் பங்கேற்பவர்களாக இருப்போம்.

> *இன்றைய வழிபாடு ஒரு மரண சடங்கு அல்ல. இன்றைய வழிபாடு ஆழ்ந்த அமைதியின் ஆரம்பமாகி இறைவார்த்தை வழிபாடு, திருச்சிலுவை ஆராதனை பின், நற்கருணை திருவிருந்தையும் அடைகிறது.*

### திருச்சிலுவை ஆராதனை

புனித பிரான்சிஸ் சவேரியார் எப்போதும் தனது செபத்தை தொடங்கமுன் திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறேன், அது ஏனென்றால் உமது திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீரே என்று செபிப்பார். திருச்சிலுவை மரம் எமக்கெல்லாம் வாழ்வின் மரம். வளமூட்டும் மரம். வழிகாட்டும் மரமாக திகழ்கின்றது. அவமானத்தின் சின்னமாகிய சிலுவை மீட்பின் கருவியாக மாறிவிட்டது. நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பற்றியே பறைசாற்றுகின்றோம். (1கொரி 1:23)

ஏதேன் தோட்டத்து மரத்தினால் வந்த சாவை சாகடித்தது இயேசுவின் இந்த சிலுவை மரம்தான். திருச்சிலுவையை முத்தி செய்வது ஒரு வெளி ஆடம்பர செயல் அல்ல, மாறாக ஒரு புனிதமான நிகழ்வாகும். எனவே வீண் பராக்குகளை விட்டுவிட்டு பயபக்தியாக திருச்சிலுவை ஆராதனையில் பங்கெடுப்போம்.

### புனித சனி

> *இலட்சிய வாழ்வில் துன்பங்கள் உண்டு. அத்துன்பங்கள் ஒருபோதும் இலட்சியத்தை சிதைக்க இயலாது. தியாகங்கள் பல உண்டு. கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு முன்மாதிரியை விட்டுச் சென்றார். (1பேதுரு 2:21) இறுதியில் இலட்சியம் மட்டுமே வெல்லும் என்பதைத்தான் இயேசுவின் உயிர்ப்பு நமக்கு நிரூபித்து காட்டுகிறது.*

இஸ்ரயேல் மக்கள் 400 ஆண்டுகளுக்கு பின்பு தங்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து கடந்து வந்ததை கொண்டாடியது பழைய பாஸ்கா. பாஸ்கா என்பது கடத்தல். அரேமயச் சொல;( Phasha) பாஷா , எபிரேயச் சொல் ( Pecach) பெசா, கிரேக்கச்சொல் (Pascha) பாஸ்கா கடத்தல் சாவு என்ற இருளை அழித்து, இயேசு நமக்கு வாழ்வு தந்ததை கொண்டாடுவது புதிய பாஸ்கா, கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளமும் மையமுமாக விளங்குவது கிறிஸ்துவின் உயிர்ப்பாகும். இயேசு உயிருடன் எழுப்பப்பட வில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே என்கிறார் புனித பவுல். இந்த நம்பிக்கை கொண்டவர்களாய் ஆண்டவரின் உயிர்ப்பில் மகிழ்ந்திடுவோம். நாமும் ஆண்டவர் உயிர்த்தெழுந்ததை பக்தியுடன் மன்றாடுவோம். இன்றைய பாஸ்கா கொண்டாட்டமானது ஒளி வழியாக, இறைவாக்கு வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்டது.

# உயிர்ப்புப் பெருவிழா

### திரு ஒளி வழிபாடு

பகலில் பகலவனாகவும், இரவில் நிலவாகவும் இன்று நம்மை வழிநடத்துகின்ற இறைவன் அன்று இஸ்ராயேல் மக்களை பகலில் மேகத் தூண் வழியாகவும் இரவில் நெருப்புத்தூண் வழியாகவும் வழிநடத்தினார். நம்மில் இருள் இல்லை என்போமானால் ஒளியின் வாழ்வை நாம் கொண்டிருக்க வேண்டும். ஒளியை கொண்டிராவிடின் நாம் இருளிலே மாய்ந்து அழிந்து விட வாய்ப்புக்கள் ஏராளம்.

பாவம் எனும் இருள் நிறைந்த வாழ்வை களைந்துவிட்டு புதுவாழ்வு எனும் ஒளியின் படைக்கலங்களை அணிந்துகொள்ள வேண்டும் என்பதன் அடையாளமாக புனிதப்படுத்தப்பட்ட திரியாக இருந்து பாஸ்கா ஒளியேற்றப்படுகிறது. இயேசுவே உலகின் ஒளி. உயிர்த்த இயேசு நம் மத்தியில் இருக்கிறார் என்பதை இது காட்டுகிறது. கிறிஸ்து என்ற திரியோடு நாமும் சேர்ந்து தீபமாக எரிவோம். பிறருக்கு ஒளி கொடுப்போம். வழி காட்டுவோம்.

### பாஸ்கா புகழுரை

இப்போது பாஸ்கா புகழுரை மகிழ்ச்சியோடு பாடப்படுகிறது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று செங்கடலை கடந்து வந்த இஸ்ரயேல் மக்கள், மிகுந்த ஆனந்தத்தோடு இறைவனை போற்றி பாடினர். இன்று தனது ஒரே மகனின் உயிர்ப்பு வழியாக நம்மை பாவத்தின் அடிமைத்தனத்தில் நின்று மீட்க அருள் வாழ்விற்கு அழைத்துச் செல்லும் இறைவனின் வல்ல செயல்களை நினைவு கூர்ந்து பாஸ்கா புகழுரை பாடப்படுகிறது. இப்புகழுரையைக் கேட்டு இறைவனை துதிப்போம்.

### இறைவாக்கு வழிபாடு

பாஸ்கா திருவிழிப்பின் இரண்டாம் பகுதியாகிய இறைவாக்கு வழிபாடு தொடங்குகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் இரவு நேரங்களில் கண் விழித்து, கடவுள் தங்களுக்கு செய்த மாபெரும் செயல்களை விவிலியத்தில் வாசித்து திருப்பாடல்களை பாடி செபித்தார்கள். புதிய இஸ்ரயேலாகிய நாமும் இறைவன் இயேசு வழியாக செய்த மீட்புச் செயல்களை நினைவு கூர்வோம். தொடக்க நூலில் தொடங்கிய இறைவனின் திட்டம், படிப்படியாக வளர்ந்து, தொலை தூரம் கடந்து, காலம் நிறைவுற்றபோது கிறிஸ்துவில் முழுமை பெறுவதை இவை படம்பிடித்துக் காட்டுகின்றன.


### திருமுழுக்கு வழிபாடு

ஆதி திருச்சபையில் வளர்ந்தோருக்கு இப்புனித இரவில் மட்டும் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. திருமுழுக்கு என்பது ஆண்டவர் இயேசுவோடு இறந்து, புதைக்கப்பட்டு உயிர்க்கின்ற கடவுளின் பிள்ளையாக மாறுகின்றோம். இப்பொழுது திருமுழுக்கிற்காகவும் ஆசீர்வதிப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் நீர், பாஸ்கா மெழுகுதிரியால் ஆசீர்வதிக்கப்படுகிறது. இப்பொழுது எமது நம்பிக்கையை புதுப்பித்து பாவக்கறைகளை அகற்றி பாவ வாழ்வை உதறித்தள்ளிவிட்டு, புதுவாழ்வை வாழ்ந்து மறு கிறிஸ்தவனாக வாழ உறுதி எடுப்போம்.

அனைத்து பாடுகளையும் ஏற்றுக்கொண்ட இறைவன் நாமும் எமது துன்பங்களையும் பிறரின் துன்பங்களையும் ஏற்க வேண்டும் என்று விரும்புகிறார். இவ்விருப்பம் இருந்தால் மட்டுமே பாடுகளுக்கு ஓசான்னா பாடுவது பொருத்தமாக இருக்கும்.

இயேசுவின் எருசலேம் பயணத்திற்கு நாற்பது நாட்களாக செபத்திலும், தவத்திலும் தானத்திலும் நம்பிக்கையோடு இருத்தல்.

ஆண்டவர் இயேசுவின் பாடுகளை ஆழமாக தியானித்தோம். பல்வேறு கவலைகளோடும், கண்ணீரோடும் துன்பதுயரங்களோடும் கூடி நிற்கும் நாம், நம்மை மீட்க இயேசுவை வரவேற்று, இயேசுவை பார்த்து கதறிய இஸ்ரயேலரின் மனநிலையோடு, குருத்தோலைகளைக் கைகளிலேந்தி பக்தியுடன் இப்பவனியில் பங்கேற்போம்.



பாஸ்கா என்பதன் அரமேயச் சொல் பெஷக் அதாவது இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து கடந்து செல்லுதல் என்பது பொருள்.

ஈஸ்டர் என்ற சொல் ஜெர்மனி வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு காலைக் கதிரவன் கிழக்கில் உதிப்பது போல கிறிஸ்து உயிர்த்தார் என்ற பொருள், கடந்து செல்லுதலுக்கும் உயிர்ப்புக்கும் உள்ள தொடர்பு. ஒன்று இஸ்ரயேல் மக்கள் விடுதலை காரணமாக புத்துயிர்பெற்று புது வாழ்வுக்கு செல்லுதல், இரண்டு, தரணிக்காக தன்னையே கையளித்த இயேசு, தரணிக்காக புத்துயிர் அளிக்க மீண்டும் உயிர்க்கின்றார். இரு கண்கள் இருந்தாலும் பார்வை ஒன்று என்பது போல, பெஷக்கும் ஈஸ்டரும் ஒரே பார்வையில் பார்க்கலாம்.



தொடக்க காலத்தில் இரண்டு வகையான பாஸ்கா கொண்டாடப்பட்டதை அறிவோம்.

1. யூதர்களின் பாஸ்கா(மோசே கேட்டுக்கொண்டதற்கிணங்க நன்றியின் விழாவாக (தி.ப 118), யூதர்கள் கொண்டாடுவதை நான்கு நற்செய்தியாளர்களும், 'இயேசு பாடுபடுவதற்கு முந்தின நாள் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குச் சென்றார்' என்று எடுத்துரைக்கிறார்கள்.

2. கிறிஸ்தவர்களின் பாஸ்கா. இவ்விரு பாஸ்காவும் யூதர்களின் நிஷான் (யூதர்களின் மாதங்களுள் ஒன்று) 14ஆம் நாள் ஒரே திகதியில் விழுந்தது. வருடங்கள் மட்டும் தான் வெவ்வேறு. அடிமைத்தனத்திற்கு விடுதலை கொடுத்து விடுதலை வாழ்வும், சாவுக்கும் சவுக்கடி கொடுத்து வாழ்வதாகும். வாழ்வும் நிசான் 14 அன்றே கொண்டாடப்பட்டது. இதனால் 2ஆம் நூற் றாண்டில் இரு கேள்விகள் எழுந்தன.

1. பாஸ்கா மறைபொருள் நிசான் 14 அன்றே கொண்டாடப்படவேண்டுமா? (அல்லது) 14ஆம் நாள் முடிந்தபின் வரும் முதல் ஞாயிறு அன்று கொண்டாடப்பட வேண்டுமா? இவ்விரு கேள்விகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக கி.பி. 305ல் நைசின் நகரத்தில் நடைபெற்ற சங்கம் 'வசந்த காலத்தின் முதல் பௌர்ணமிக்கும் பின்வரும் முதல் ஞாயிற்றுக் கிழமையில்தான் கொண்டாடப்பட வேண்டும்' என்று கூறியது. அதாவது, நிலவின் சுழற்சியை வைத்து கணக்கிடப்படுவதால், உயிர்ப்பு விழாவானது மார்ச் 22 முதல் ஏப்ரல் 25க்குள் வரும்.

அது ஏன் ஞாயிற்றுக்கிழமை? அதுவும் இரவு பிறந்த பின்னர்?

திருச்சபை கிறிஸ்துவின் உயிர்ப்பை விழித்திருந்து எதிர்பார்த்து அதை அருளடையாளங்கள் வழியாகக் கொண்டாடுகிறது. இத்திருவிழிப்பு இரவு நேரத்தில் கொண்டாடப்பட வேண்டும். அதாவது அதை இரவு இறந்த பின்னரே தொடங்கலாம். ஞாயிறு காலை பொழுது புலர்வதற்கு முன் முடிக்க வேண்டும்' என்கிறது. மேலும் கி.பி.4ஆம் நூற்றாண்டில் சட்டத்தின்படி பாஸ்கா திருவிழிப்பு இரவு முழுவதும் நடந்தது. மேலும், இது வியற்காலை, திருவிருந்துடன் நிறைவு பெற்றது. சூரிய உதயத்திற்குப் பின் எந்த விதமான வழிபாடும் இந்நாளில் இருக்கவில்லை. நள்ளிரவில் பாஸ்கா திருவிழிப்பை முடித்துவிட்டு, பாஸ்கா திருவிருந்தை விடியற்காலையில் தொடங்குவதன் நோக்கம், இரவு - பகல்; நோன்பு - திருவிருந்து; அழுகை - மகிழ்ச்சி; இறப்பு - வாழ்வு மற்றும் உயிர்ப்பு ஆகியவற்றின் வேறுபாட்டை நினைவுகூர்வதற்காக நடத்தப்பட்டது. மேலும், நமக்கெல்லாம் தெரியும், பாஸ்கா புகழுரையில் வரும் வைர வரிகளான,

*இஸ்ரயேல்மக்களை.... செங்கடலைக் கடக்கச் செய்தது இந்த இரவிலேதான்.*
*பாவத்தின் இருளை அகற்றிய இரவும் இதுவே.*
*விசுவாசம் கொண்டவர்களை புனிதமாக்கியதும் இந்த இரவிலேதான்.கிறிஸ்து பாதாளத்திலிருந்து வெற்றி வீரராய் எழுந்ததும் இந்த இரவிலேதான்.*
*ஓ மெய்யாகவே பாக்கியம் பெற்ற இரவே*
*இரவு பகல்போல் ஒளிபெறும். நான் மகிழ்வுற இரவும் ஒளிதரும் என்று எழுதியுள்ளது.*
*இந்த இரவைக் குறித்தே. இப்புனிதமான இரவில் நாங்கள் அளிக்கும் மாலைப் பலியை ஏற்றருளும்.*
*என்று கூறுதலாலும், ஞாயிறு, வாரத்தின் முதல் நாளாய் இருப்பதாலும் இரவு பிறந்த பின்னர் கொண்டாடுவது சாலச் சிறந்தது.*

### உயிர்ப்பு அன்று திருமுழுக்கு ஏன்?

வட ஆபிரிக்காவில் 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இறையியலாளர் தேர்த்தூலியன் கூறுவார், பாஸ்கா விழா நாளே திருமுழுக்குக்குச் சிறந்த நாளாகும். ஏனென்றால், திருமுழுக்கின் வழியாக இயேசுவின் துன்பத்தில் இணைந்து அவரது மகிமையில் நாம் பங்குபெறுகின்றோம் என்பதால் அது நிறைவேற்றப்பட்ட நாளே திருமுழுக்கிற்கு ஏற்ற நாள். அன்று இரவு இறைமக்கள் மீது தெளிக்கப்படும் தண்ணீரானது நமது திருமுழுக்கை நினைவுபடுத்துவது மட்டுமல்ல, இது ஒரு பழமையான வழிபாட்டு முறையாகும். இது நாம் கிறிஸ்துவில் புத்துயிர் பெற்று புது வாழ்வு அடைந்ததை நினைவு கூறுகிறது.

இறுதியாக, காணி, நிலம் கிடைக்க வேண்டும், காலிக் கல்லறை கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர் இறக்க வில்லை; காலிக் கல்லறை மீண்டும் காலிக் கல்லறையாக வேண்டும் என்பதற்காகவும் அவர் உயிர்க்கவில்லை. மாறாக, கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் (புனித யோவா 12:24) என்றும், தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என்பொருட்டு தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர் (புனித மாற் 8:35) என்றும் தாம் சொன்னபடியே ஒவ்வொரு நொடியும் உயிர்ப்புடன் வாழ்ந்தார். எந்த அளவுக்கு முத்துக்கும், சிப்பிக்கும்தொடர்பு உள்ளதோ அந்த அளவுக்கு நமக்கும் உயிர்ப்புக்கும் தொடர்பும் உறவும் உண்டு. இயேசுவின் உயிர்ப்பை வரலாறாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல் வாழ்க்கையாகவும் எடுத்துக்கொண்டு, அவர் உயிர்த்தார், நாமும் உயிர்ப்போம் என்ற நம்பிக்கையில் நல்வாழ்வு வாழ்வோம், உயிர்ப்பின் சாட்சிகளாகத் துலங்குவோம்.

வெறுமையாக்கப்பட்ட ஆண்டவர் இயேசுவின் கல்லறை நமது நம்பிக்கைக்கு சாட்சியாகத் திகழ்கிறது. ஆண்டவரின் உயிர்ப்பு, நாமும் இறந்து ஆண்டவரில் உயிர்ப்போம் என நமக்கு நிரூபிக்கிறது. இந்த நம்பிக்கை கொண்டவர்களாய் ஆண்டவரின் உயிர்ப்பில் மகிழ்ந்திடுவோம்.



# செல்வம் வரமா? சாபமா?



சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ, தேசிய குருமடம், கண்டி.

"அர்த்தமுள்ள இந்துமதம்" என்ற நூலில் கவிஞர் கண்ணதாசன் பின்வருமாறு கூறுகின்றார். "செல்வம் என்பது எப்போதும் நம் கைகளை விட்டுச் செல்வோம் என்று நிற்பதால்தான் செல்வத்திற்கு செல்வம் என்று பெயர் வந்தது" செல்வம் என்று வரும்போதெல்லாம் திருவிவிலியம் இரண்டு வகையான கருத்துக்களை கொண்டுள்ளது.

ஒரு பக்கம் பண ஆசை அனைத்து தீமைக்கும் ஆணிவேர் என்றும், மறுபக்கம் பயன்படுத்தப்படும் உருவங்கள் எல்லாம் "புதையல்", "முத்து" என்று செல்வம் பற்றியதாக, அதனை பெற்றுக்கொள்ள அனைத்தையும் இழப்பதாக காட்டப்படுகின்றது.



எனவே விவிலியத்தின்படி செல்வம் இறைவனின் ஆசீர் என்றும் மறுபக்கம் ஏழையரின் அருகில்தான் இறைவன் இருக்கின்றார் என்றும் சொல்லப்படுகின்றது. (உதாரணமாக ஏழை லாசரும், செல்வந்தரும் உவமையில் நாம் எமது கருத்துப்படி முடிவுக்கு வருவது இறைவன் ஏழைக்கு மோட்சபாக்கியம் கொடுப்பார் என்றும், செல்வந்தர்களை நரக பாதாளத்தில் தள்ளிவிடுவார் என்றும் சிந்திப்பதுண்டு) எனவே செல்வம் சேர்ப்பது வரமா? சாபமா?. இந்த செல்வத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் எதை எடுத்துக் கொள்வது? எதை விட்டுவிடுவது? செல்வத்தை பிடித்துக் கொள்வதா? விட்டுவிடுவதா? செல்வம் தருகின்ற வாழ்வை நாடுவதா? வாழ்வு தருகின்ற செல்வத்தை நாடுவதா? இது எல்லாமே எம் உள்ளத்தில் எழும் கேள்விகளாக இருக்கின்றது.

## இயேசுவின் படிப்பினை

இயேசுவின் காலத்தில் கூட, செல்வந்தர்கள் தங்களின் நிலையை எண்ணி உயர்ந்த எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்ததுடன், செல்வத்தை பற்றி தங்களின் பங்களிப்பும், அதனை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளையும் அன்றாடம் தேடிச் சென்றார்கள். தங்கள் குடும்பத்தில் செல்வத்தை பிரித்தல், இது தொடர்பான பிரச்சினைகளை அவர்கள் அன்றாடம் எதிர்கொண்டார்கள். எனவே நிலைவாழ்வை பற்றி அவர்கள் மறந்து போனார்கள். இங்கு இரண்டு வகையான நபர்களையும் அதற்கான இயேசுவின் படிப்பினையையும் காண்போம்.

1. "நிலைவாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும்?" (லூக் 10:25) என்று திருச்சட்ட அறிஞர் கேட்க, இயேசு அவருக்கு "நல்ல சமாரியன்" (லூக் 10:26-37) உவமையை குறிப்பிடுகின்றார். எனவே நிலைவாழ்வுக்கான அடிப்படை செல்வம் சேர்ப்பது அல்ல மாறாக அயலாரின் இன்பதுன்பத்தில் பங்கு கொள்வது.

2. லூக் 12:13-21 இங்கு பெயரில்லாத ஒரு நபர் இயேசுவை அணுகி "போதகரே சொத்தை என்னோடு பங்கிட்டு கொள்ளுமாறு என் அண்ணனுக்கு சொல்வீரா?" இங்கு சொத்துச் சண்டை வருவதையும், அதற்கான இயேசுவின் பதிலையும் காணலாம். (இந்த பெயரில்லாத நபரில் நம் ஒவ்வொருவரின் பெயரையும் வைத்து சிந்தித்தால், இன்றைய யதார்த்தம் அன்றும் உண்மை என்பது புரியும்)

காரணம் இணைச்சட்ட 21:17 விதிமுறையின் படி, குடும்பத்தின் சொத்தானது அண்ணனுக்கு இருபகுதியும், தம்பிக்கு ஒரு பகுதியுமாக போய்ச் சேரவேண்டும். எனவே இதற்கான நிலையை அறிந்த பெயரில்லாத நபர் இயேசுவிடம் முறையிடுகின்றார்.

இங்கு இயேசு "செல்வம்" என்பதன் சிறப்பு பற்றியும், எமது வாழ்வு பற்றியும் அவனுக்கு எடுத்துரைப்பதை காணலாம். அந்த நபரின் கேள்விக்கு பதிலளித்த இயேசு பின்வருமாறு கேட்கின்றார். "என்னை உங்களுக்கு நடுவராகவோ, பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?" இயேசுவின் கேள்வி அறிவுரையாக மாறுகின்றது. எவ்வகை பேராசைக்கும் இடம் கொடுக்காதவாறு எச்சரிக்கையாய் இருங்கள். மிகுதியான உடைமைகளை கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்தவிடாது என்கிறார். இயேசுவின் இந்த அறிவுரை இரண்டு கருத்துக்களை கற்பிக்கின்றது.

1. பேராசை அறவே கூடாது
2. உடைமைகள் ஒருவருக்கு வாழ்வு தருவதில்லை.

### இயேசுவின் படிப்பினையில் "அறிவற்ற செல்வன்"

இயேசு "அறிவற்ற செல்வன்" என்ற உருவகத்தின் வழியாக செல்வம் சேர்ப்பது பற்றி கற்பிக்கின்றார். இந்த அறிவற்ற செல்வன் உண்மையாகவே அறிவற்றவன் அல்ல. அறிவினன்தான். அவனுக்கு அறிவில்லை என்றால் எவ்வாறு தன் கிடங்குகளோ கொள்ளாத அளவிற்கு தானியத்தை "உற்பத்தி செய்ய முடியுமா? இந்த அறிவற்ற செல்வன் கடின உழைப்பாளி..." என் வயிற்றுக்கு நான் உழைத்து உண்ண வேண்டும்", "உழைக்காதவன் உண்ணலாகாது" என்ற படிப்பினைகளை எல்லாம் கொண்டு தன் வயிற்றுக்கு உழைக்கின்றார் அவரின் செல்வம் யாரையும் ஏமாற்றி சேர்க்கவில்லை. நல்ல திட்டமிடுபவர். எனவேதான் களஞ்சியத்தை சேர்க்க இடமில்லாததால் இடித்துக் கட்ட நினைக்கின்றார். அவர் இது வரைக்கும் செய்தது சரி. ஆனால் இதற்கு பின் உள்ளத்தை பார்த்து சொல்லும் வார்த்தைகள் தான் இயேசுவின் பார்வையில் தவறாகின்றன. எனவே தான் அவரை குறித்து கூறுகின்றார்.

தன் உள்ளத்திற்குள்ளேயே நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கின்றார். அவரே அதற்கான பதிலை முன்வைக்கின்றார். மூன்று எதிர்கால நிகழ்வுகளை முன்வைக்கின்றார்.

1. நான் களஞ்சியத்தை இடித்து இன்னும் பெரிதாக கட்டுவேன்.
2. என் தானியத்தையும், பொருள்களையும் சேர்த்து வைப்பேன்.
3. என் நெஞ்சிடம் சொல்வேன்.

"நான்", "என்" என்ற வார்த்தைகள் இந்த செல்வர். எந்த அளவுக்கு தன்னை மட்டுமே மையப்படுத்தியதை அடிக்கோடிட்டு காட்டுகின்றன.

செல்வனின் மனநிலை என்ன? "என் நெஞ்சமே உண்டு பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. நீ ஓய்வெடு, உண்டு, குடித்து மகிழ்ச்சியில் திளைத்திடு" என்கின்றான். பணம் பெற்றவரின் வாழ்வு "உண், களி, கொண்டாடு" என்று இருப்பதாக விவிலியம் கூறுகிறது. (காண்க. சீராக் 11:9, எசா 22:12-14, தோபித்து 7:10-11, 1கொரி 15:32) ஆனால் கடவுளின் குரல் ஒலிப்பதை கேட்கின்றார். "அறிவிலியே இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டு பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையதாகும்? இங்கு இயேசு படிப்பினையை கொடுக்கின்றார். கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய் தமக்காகவே செல்வம் சேர்ப்பார். இத்தகையோரே ஒருவர் சேர்க்கும் செல்வம் தனக்கானதாக இருந்தாலும் அவர் இறந்தபின் அது இன்னொருவருக்கு விட்டுச் செல்லப்பட வேண்டும்.

## சபை உரையாளரின் படிப்பினை

சபை உரையாளரின் படிப்பினையின் படி, அவர் தன் நூலை ஆரம்பிக்கும் போதே "எல்லாமே வீண்" என்கின்றார். சபை உரையாளரின் கருத்துப்படி உழைப்பு, இன்பம், ஞானம், அறிவு, சட்டம் என அனைத்தும் "வீண்" என்று காரசாரமாக வாதாடுகின்றார்.

செல்வம் காற்றைப் போல பறந்து போகக்கூடியது. இது கடந்து போகும். எனவே அதனை சேமிப்பதும் அதன் மேல் அன்பு கொள்வதும் "வீண்" என்கிறார்.

வாழ்க்கையில் செல்வம் என்னை காப்பாற்றும் என்று நினைப்பவருக்கு, சபை உரையாளர் தரும் படிப்பினை இது எதுவுமே நம்மை காப்பாற்றாது. வீண் முற்றிலும் வீண் என்கின்றார். வீணானவைகளை சுட்டிக்காட்டி அவை வீண் என்றும் அதற்காக உழைக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்துகின்றார். "உழைப்பு வீண்" என்று வாதிட்டாலும், ஞானத்தோடும், அறிவாற்றலோடும், திறமையோடும் ஒருவர் உழைத்தாலும் உழைத்து சேர்த்த சென்று அனைத்தையும் உழைக்காத ஒருவருக்கு அவர் விட்டுச் செல்ல வேண்டும் என்கிறார். (காண்க. ச. உரை 1:2, 2:21-23)

## புனித பவுலின் படிப்பினை

புனித பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகம் 3:1-5,9-11ல் கிறிஸ்தவ வாழ்வின் பண்புகளை பற்றி அறிவுறுத்துகின்றார். ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்து உயிர் பெற்றதன் அடையாளம் "மேலுலகு சார்ந்தவற்றை நாடுவது" என்கிறார். நாம் வாழ்வது கீழுலகில் என்றாலும் எமது எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் மேலுலகு சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்கிறார். இவ்வுலக போக்கிலான பாலுணர்வு, தீய நாட்டம், சிலை வழிபாடான பேராசை இயற்கை ஒழிக்க வேண்டும் என்கிறார். இவை செல்வ செழிப்பின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. இவை யாவும் பழைய வாழ்வின் இயல்புகள் என்றும் புதிய வாழ்வின் மனித இயல்பான கிறிஸ்துவை அணிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்.

## நம் வாழ்வில் செல்வம்

பலருக்கு செல்வம் தான் வாழ்வு, பலருக்கு செல்வம் எட்டாத கனி, பலருக்கு செல்வம் அன்றாட நிகழ்வு, இவையனைத்தையும் கொண்ட 21ம் நூற்றாண்டின் மனித வாழ்வின் இருப்பு செல்வத்தை அடிப்படையாகவே கொண்டுள்ளது. காரணம் மக்கள் நாளுக்கு நாள் செல்வத்தை சேர்க்க முனைகின்றார்களே தவிர, கிறிஸ்துவின் படிப்பினைகளை மறந்து விடுகின்றார்கள். உலக போக்கின்படி செல்வந்தர்கள் இன்றும் செல்வந்தர்களாக உயர்ந்து செல்கின்றார்கள். ஏழை குடிமகன் ஏழையாகவே வாழ்ந்து இறக்கின்றான். இது உலக நியதி, இதனைதான் கிறிஸ்து கடிந்து கொள்கின்றார். ஒருவர் செல்வந்தராய் பிறந்து, வாழ்வது என்பது அவருக்கான ஒரு உயரிய அழைப்பு இருக்கின்றது. அதாவது அவர் அருகில் வாழும் ஏழை குடிமகனையும் தன் எண்ணத்தில் கொண்டு அவனின் நாளாந்த வாழ்வை கொண்டு செல்ல உதவவேண்டும். இதனை தான் ஏழை இலாசர், செல்வந்த உவமை வழியாக இயேசு கற்பிக்கின்றார்.

நாம் வாழும் காலத்தில் காண்கின்ற உண்மையினை நாம் எடுத்துக் கூற முடியாது. மக்கள் செல்வர்களாய் உயர்ந்து சென்று, மக்களின் அன்றாட வாழ்வை சுரண்டாத வாழ்வதை காண்கின்றோம். நியாயமான வழி நீங்கி, அமைதியான முறையில் பணம் சம்பாதிப்பதை காண்கின்றோம்.

நவீன தொழில்நுட்பவியல் உலகம் மக்களின் மனதை திசை திருப்பி, மக்களின் அடிமை வாழ்வையும், மக்களை அடிமையாக வாழும் வாழ்வையும் கண்முன்னே காட்டி மனிதனை சமுதாய வாழ்விலிருந்து பிரிக்கின்றது. இதனால்தான் புனித பவுல் சமூக சீர்கோடுகளான பாலுணர்வு, தீயநாட்டம் இவற்றை வன்மையாக கண்டிக்கின்றார்.

இயேசுவிடம் வந்த செல்வந்தன் போல, குடும்ப சொத்துப் பிரச்சினைகனை எத்தனை முறை குடும்ப தகராறுகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். சிலவேளை பெற்ற தாயை கூட மதியாது குடும்ப செல்வத்திற்காக சுயநலமாக வாழும் மக்களையும் நாம் கண்டுள்ளோம்.

எனவே நாம் எதனை செல்வமாக்க வேண்டும்? நாம் எதையும் எடுத்துச் செல்வது இல்லை. நாம் இறந்தபின் அணியும் உடை கூட எமக்கு சொந்தமானதாக இருக்கின்றதா? எனவே மண்ணுலக செல்வத்தை நாடும்போது, விண்ணுலகம் செல்லும்போது வெறுங்கையராய் செல்வோம். வாழ்கின்ற போதே விண்ணுலக செல்வத்தை நாடும்போது, இறந்த பின் மகிழ்ச்சியாக இறைவன் திருமுன் செல்வோம். எனவே இந்த தவக்காலம் எமது விண்ணுலக செல்வத்தை பற்றி தியானிக்க ஒரு சிறந்த காலம்.

**செல்வம் தரும் வாழ்வா?**

**வாழ்வு தரும் செல்வமா?**

## 01 இலங்கை ஆயர்...

மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, உபதலைவர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை, யாழ் மறைமாவட்ட ஆயர்

அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்

மேதகு. J. வியானி பர்னாந்து ஆண்டகை, கண்டி மறைமாவட்ட ஆயர்

மேதகு. ஹெரல்ட் A. பெரேரா ஆண்டகை குருநாகல் மறைமாவட்ட ஆயர்

மேதகு. நோர்பட் M அந்திராடி [O.M.I] ஆண்டகை அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர்

மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை

மேதகு. ரேமன் K. விக்ரமசிங்க ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர்

மேதகு. கிளிட்டஸ் C. பெரேரா [O.S.B] ஆண்டகை இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர்

மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

மேதகு. F. L. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை மன்னார் மறைமாவட்ட ஆயர்

மேதகு. நோயல் C. இம்மானுவேல் ஆண்டகை திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

மேதகு. மெக்ஸ்வல் G. சில்வா ஆண்டகை, கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்

மேதகு. P. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்

## 01 வாழ்த்துகின்றோம்.

பெசில் ரொஹான் அவர்கள் வரம் பெற்றார். அதுகல்புர மறைமாவட்டத்தின் பல பங்குகளில் சேவையாற்றிய இவர் பாப்பிறை மறைபரப்பு சபைகளின் மறைமாவட்ட இயக்குனராக 2000ம் ஆண்டிலிருந்து 2004ம் ஆண்டு காலமாக சேவையாற்றியதோடு, மறைமாவட்ட நிதியாளராக நான்கு வருடங்கள் அழப்பரிய சேவையை ஆற்றியுள்ளார். 2016ம் ஆண்டு பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனராக நியமிக்கப்பட்ட இவர் 2021ம் ஆண்டு வரை எம் தாய் திரு அவைக்கு ஆற்றிய சேவையோ எண்ணிலடங்காது.

முதல் சேவைக்காலப்பகுதியை நிறைவு செய்து 2021 - 2026 பங்குனி மாதம் 31ம் திகதி வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உத்தரவாதத்தால், பாப்பிறை விசுவாச சங்கத்தின் தலைவர் அதி.வண.கருதினால் அலோசியஸ் அந்தோனியஸ் ஜி கர்தினால் டக்லே ஆண்டகையின் அனுமதியோடு, உரோமை பாப்பிறை மறைபரப்பு சபைகளின் சர்வதேச செயலாளர் அதி. வண. ஜியம்பீட்ரோ தர்தோசோ

அவர்களினால் பிரகடணப்படுத்தப்பட்டது. எம் அருட்தந்தை அவர்களின் இப்புனிதமான பணி சிறக்க தூய ஆவியின் வரங்கள் நிறைவாக கிடைக்க இறையாசீர் வேண்டுவதோடு, எம் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## 01 பாஸ்கு விசாரணை...

இந்நிலையை ஏற்படுத்தியவர்கள் யார் என்பதை தேடிப்பிடித்து வெளிப்படுத்தும்வரை, அவர்களுக்கான தண்டனை கிடைக்கும்வரை எமது போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம். இந்நாட்டின் நீதி, நியாயம், சமாதானத்தை பாதுகாக்க வேண்டுமாயின் அடிமைப்பட்ட அரசியலிலிருந்து மீள வேண்டும். முதுகெலும்பு உள்ள, உண்மையான, சட்டத்தை மதித்து பாதுகாக்கும், குற்றவாளிகளை தண்டிக்கும் வலிமையுள்ள; இலாபம், பணம் எதிர்பாராது கடமையாற்றும் நல்ல தலைவரே எமக்குத் தேவை.

**தகவல் : திரு. T. சுனில்**

## 01 தலவில...

அச்சுறுத்திய சாபக்கேடான செயலுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள், அவர்களுக்கு பக்கபலமாக இருந்தவர்களுக்கும் சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றார்கள். கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் ஆண்டகைளினால், இத்திருவிழாவில் இறுதியில் புனித அன்னம்மாள் திருச்சுரூப பவனியும் அதைத்தொடர்ந்து ஆசீர்வாதமும் நடைபெற்றது.

## 02 தலவில...

வருகிறார் என்று, அருள்பணி ீநசநசைய அவர்கள் கூறியுள்ளார்.

திருஅவையின் வரலாற்றில் முதன் முறையாக, தனக்கு ஆலோசனை வழங்க, ஒன்பது பேர் கொண்ட கர்தினால்கள் அவையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருவாக்கியுள்ளார் என்றும், மும்பை இயேசு சபை அருள்பணி Pereira அவர்கள் கூறியுள்ளார்.

## 03 குருத்து ஞாயிறு

இயேசுவைப் பொறுத்தவரை அவரது மகிமை, மாண்பு, உயர்வு எல்லாம் கோதுமை மணியாக மடிவதில் மட்டுமே எனவே எருசலேமை நோக்கி தனது இறுதி பயணத்தை மேற்கொண்டார். மக்களுக்காக துன்புறும் ஊழியனாக, பலருடைய பாவங்களைச் சுமந்து செல்லும் செம்மறியாக சென்றார்.

ஆகவே, நாம் எப்படி இயேசுவைப் போற்றி புகழ்கிறோம். அவருக்காக என்ன செய்கின்றோம், இயேசு நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றார்? என்று சிந்திப்போம். குருத்தோலைகளை சிலுவை வடிவில் செய்து பார்ப்பதில் ஆனந்தமடைகின்றோம். அதைவிட நமது வாழ்வு சிலுவையாக மாற வேண்டும். பிறருக்கு தன்னையே கையளிக்கின்ற சிலுவையாக மாறவேண்டும்.

தூய அகுஸ்தினார் சொல்வது போல "ஒலிவ மரக் கிளைகளை அல்லது மேலுடைகளை விரிப்பதற்குப் பதிலாக இயேசுவுக்கு முன் நம் உள்ளங்களை விரிப்போம்.

## 05 கொழும்பு உயர்...

**இறுதி 15 நிமிடங்கள்**

**8.7.12** கடந்த "வாரத்தின் செயற்பாடு" பற்றி மதிப்பீடுசெய்தல் - ஊக்குவிப்பாளர்.

**8.7.13** அடுத்த வாரத்திற்கான வழிநடத்துனரை தெரிவுசெய்து கொள்ளல்.

**8.7.14** அடுத்த வாரத்திற்கான ஒன்றுகூடல் நடைபெறும் இடம், நேரம் போன்றவற்றை திட்டமிடல் அல்லது நினைவூட்டுதல்.

**8.7.15** நன்றி செபம் / இறுதிப் பாடல்

**கவனத்திற்கொள்ள வேண்டியவை:–**

♦ ஒன்றுகூடல் நடைபெறும் இடத்திற்கமைவாக பங்குபற்றுவோர் அனைவரும் வட்டமாக அமர்ந்திருத்தல் நன்மை தரும்.

♦ யாதார்த்தமாக சிந்தித்து ஒன்றுகூடலின் ஆரம்பத்திலோ அல்லது இறுதியிலோ விருந்துபசாரம் (சிற்றுண்டி / பானம்) வழங்காமலிருத்தல் நல்லது.

## 02 கொரோனாவின்...

என பெயரிடப்பட்டது. பெந்தகொஸ்தே திருவிழிப்பு ஒன்றுகூடலுக்கு தென் இந்தியாவிலிருந்து ஒரு கத்தோலிக்க குருக்களை அழைத்து மக்களை ஆன்மீகத்தில் போஷித்தார். இவை எதையும் தன்னை பிரசித்தப்படுத்தவோ, இலாபநோக்குடனோ செய்யவில்லை. அவரது மரணம் கொரோனாவின் கொடூரத்தை எமக்கு காட்டியது. எனக்கு அவரது மரணம் மோயீசனின் எலியாவின் மரணங்களை நினைவு படுத்தியது.

இந்த விசுவாசமான உமது ஊழியனுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா வாழ்வையும் கொடுத்தருளும்.

டிவோட்டா உங்களுக்கு இயேசுவின் துணை!


**கிறிஸ்து இயேசுவினுள் மைக்கள் மேரி மார்த்தா**

**சுபெந்தி சகோதரி**

## 01 கறுப்பு ஞாயிறு...

பாஸ்கு தாக்குதல் நடந்து இரண்டு வருடமாகியும் எமக்கு நீதி கிடைக்கவில்லை என்றால் மேலும் கடுமையாக போராட்டத்தை முன்னெடுக்க மக்களை உட்படுத்துவோம்! கறுப்பு ஞாயிறு தினத்தன்று ஊடகங்களுக்கு, அதி. மேதகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கருத்து தெரிவிக்கையில் கூறினார். மேலும் தமது கருத்தில், இந்த பாஸ்கு குண்டுத்தாக்குதலுகுக்கு நிதியுதவி வழங்கியர்கள் யார்?, எந்த அரசியல் கட்சி இத்தாக்குதலின் பின் நின்றது? இத்தாக்குதலுக்கு உள்ளூர், வெளிநாட்டு தொடர்பு உள்ளதா? போன்றவற்றிற்கு உண்மையான விசாரணை செய்ய அரசு இன்னும் அதிகமாக செயல்பட வேண்டும். இவ்வருடம் சித்திரை 21ம் திகதியாகும்போது மேல் குறிப்பிட்ட எமது கேள்விகளுக்கு தகுந்த செயல்பாடு நடைபெற வேண்டும். இல்லையேல் இதைவிட கடுமையாக எதிர்ப்பைத் தெரிவிக்க நேரிடும்! தொடர்ந்து கூறுகையில், இன்று எமது மக்கள் தமது எதிர்ப்பில் தெளிவான நீதியைக் கேட்டு நிற்கின்றனர் என்றார். அன்றைய தினம் பௌத்த தேரர், இஸ்லாம் மத பிரதிநிதிகள் போன்றோரும் தாக்குதலுக்கு எதிராக தமது கருத்தைத் தெரிவித்தனர்.

84 வயது நிரம்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2013ம் ஆண்டு பங்குனி 13ம் திகதி, கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், அமெரிக்காவிலிருந்தும், இயேசு சபையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தையாவார். Jorge Mario Bergoglio என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், 1936ம் ஆண்டு, மார்கழி 17ம் திகதி, அர்ஜென்டீனா நாட்டுத் தலைநகர் புவனோஸ் அய்ரஸ் நகரில் பிறந்தார்.



## மணமகள் தேவை

கொழும்பு, றோமன் கத்தோலிக்கம் 1984, 5' 7", எஞ்ஜினியராக பணிபுரிந்து U.Kல் கல்வி கற்கும் மகனுக்கு பெற்றோர் படித்த, மெலிந்த நற்குணமுடைய பெண்ணை எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0771198697**

(AD 2791)

## 11 ஆக்கபூர்வமான...

**ஆழமான நம்பிக்கை**

எல்லாம் இறைவனின் கரத்திலிருக்கிறது என்ற ஆழமான விசுவாசமும், மன உறுதியும் வாழ்வில் நம்பிக்கையை வளர்க்கிறது. என்ன நேர்ந்தாலும் வாழ்வுக்கு அர்த்தமும் நோக்கமும் உண்டு. இறைவன் அவர்களின் தேவையைப் புரிந்து அவர்களை இறுதிவரை வழிநடத்துவார்.

பொன்கூவர் என்ற ஒரு ஜேர்மனிய போதகர் வெளிப்படையாக அநீதிகளைச் சுட்டிக்காட்டியதால் சிறைப்படுத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். அப்படியிருந்தும் அவரது சிறைக்கூட மடல்களில் எதைப்பற்றியும் முறையிடவில்லை. இறுதிவரை மகிழ்ச்சியோடு இருந்து தன் நண்பர்கள், குடும்பத்தினர் மட்டில் அக்கறையும் கரிசனையும் காட்டினார். மரண தண்டனை நேரம் வந்ததும் "இது முடிவல்ல, புதிய தொடக்கம்" என்றார்.

ஆழமான விசுவாசத்தால் ஏற்படும் நம்பிக்கை வெல்ல முடியாதது. நீங்களும் இதே மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளலாம். இதன் பலன்கள் உங்களுக்கும் உங்களைச் சூழ உள்ளவர்களுக்கும் அளவிட முடியாதவை.

## 10 விவிலிய வினா விடை

11. இஸ்ரயேல் மக்களின் காலம், இயேசுவின் காலம், திருச்சபையின் காலம் என முப்பெரும் கட்டங்களாக பிரிக்கிறார். (முன்னுரை)
12. எருசலேம் (முன்னுரை)
13 இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்தார் (முன்னுரை)
14. அமைதி பெறுதல், சிலுவை சுமத்தல் (முன்னுரை)
15 ஆரோன் (1:5)
16. ஏரோது (1:5)
17. அபியா (1:5)
18. எலிசபெத் 1:5)
19. கடவுளின் (1:6)
20. குருத்துவப் பணி (1:8)

## 01 74வது சிறுவர் தினம்.

மூன்றாவதாக இயற்கையுடன் நெருக்கமான ஒன்றிப்பை ஏற்படுத்த வேண்டும் என்றுரைத்தார். எமது இயற்கையை மதிக்க வேண்டும். அதன் இலைகொளை, பிராணிகளை அன்பு செய்ய வேண்டும். இயற்கையை அழிக்க எம்மால் முடியாது. சூழலை சுத்தமாக வைப்பது எமது கடமையாகும். உலகில் பல நோய்கள் வருவதற்குக் காரணம் இயற்கைக்கு எதிராக சுயநலவாதிகளாக செயல்படுவதாலேயேயாகும் என்று கூறினார்.

துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தமிழில் மறையுரையாற்றியபோது; 1947ம் ஆண்டு வைகாசி மாதம் 17ம் நாள் முதன் முறையாக கொண்டாடப்படுகின்றபோது, சிறுவர்களாகிய நீங்கள் தேவதாயாரிடம் செபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இரண்டாவதாக, தேவ தாயாரிடம் செபிக்கின்ற போது கிடைக்கின்ற வரத்திற்காக நன்றிக் கூற வேண்டும் என்ற நோக்கத்தை மையமாக வைத்து இச்சிறுவர்தினம் ஆரம்பிக்கப்பட்டது என்று கூறி, மேலும் பல விடயங்களை சிறுவர்களுடன் பகிர்ந்துக் கொண்டாகள்.

இவ்வைபவத்தில் துணை ஆயர்களான மேதகு, ஜே.டீ. அன்தனி ஆண்டகை, மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை ஆகியோரும் இணைந்து சிறுவர் தின திருப்பலியில் கலந்துக்கொண்டனர்.

எமது நாட்டு கொள்ளை நோய் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட சிறுவர்களையே சுகாதார கட்டமைப்புக்கேற்ப அனுமதிக்கப்பட்டனர். அன்றைய தினம் 2022ம் ஆண்டான வருகிற வருடம் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் 75வது சிறுவர் தின ஜுபிலி ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி சுரங்க பொன்சேகா அடிகளினால் ஒழுங்கமைக்கப்பட்டது.

**தகவல் : திரு. T. சுனில்**




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்





| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

- ✦ திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- ✦ திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |




**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்